38

Rl 844/24

...ரகாம் பிரதர்ஸ் பிரசுரங்கள். நே. 1

# மோகனா

அல்லது

# மோசம்போன தாராநாதன்

1 - JUL 1924

இதி...

கோயமுத்தூர்

**K. கிருஷ்ணசாமி அய்யர்**

எழுதியது

சி. கு. நாராயணசாமி முதலியார்

பதிப்பித்தது

1924

காபிரைட்]

[விலை அணா **6**

186849

கதாசாகரம் பிரதர்ஸ் பிரசுரங்கள். நே. 1

# மோகனா

அல்லது

## மோசம்போன தாராநாதன்

கோயமுத்தூர்

**K.** கிருஷ்ணசாமி அய்யர்

எழுதியது

கோயமுத்தூர்

சி. கு. நாராயணசாமி முதலியார்

பதிப்பித்தது

1924

காபிரைட்]

[விலை அணா **6.**

PRINTED AT

THE B. N. PRESS, MOUNT ROAD

MADRAS.

# மோகனா

அல்லது

# மோசம்போன தாராநாதன்

# முகவுரை

தமிழ்த் தெய்வத்திற்கு ஒரு சிறு தொண்டியற்ற வேண்டுமென்ற அவாமெத்தநாளாக எம்மனத்தை அலைத்து வந்தது. ஆயின், அது பரோபகாரார்த்தமும், நன்னோக்கமு மாயிருத்தல் வேண்டுமென்பது பிரதான நோக்கம். அது எவ்வகையதென்று ஆலோசித்தவழி, பணம் படைத்த பிரபுக்களும், விடர்களும், காமுகர்களும், அறிவிழந்து மாயநட்பும், வஞ்சக நினைவுமுள்ள மோகப்பரத்தையர்கள் இன்பம் நாடித் தம் கைப்பொருளிழந்து, கனங்குறைந்து, மனமொடிந்து, பிணிவாய்ப்பட்டுப் பாயும் படுக்கையுமாயிருந்து நொந்து வருந்துவதைக் காணச்சகியாது அவர்கள் அங்ஙனஞ் செல்லாவகை நல்வழியிலுய்க்க முயல்வதே மேலான நன்மையெனக் கண்டது. இது நன்மார்க்கமெனக் கண்டதால், பாரில் பட்டழிந்தோர் வறலாற்றைக் கூறி அதன் மூலம் அனுபவங்களையும், அறிந்த உண்மைகளையும், நீதித் துறைகளையும் விளக்குவது நன்றெனக் கருதுகின்றோம். புத்திபோதகத்தைத் தரும் நல்லவிஷயத்தை எத்தனை தரம் எத்தனை வகையாய்க் கிளந்துரைப்பினும் மிகையாகாது. உலக சம்மதமும் அதுவே. ஆனதால், நாம் இதுவரையும் கண்டு கேட்டுணர்ந்ததையும், அறிஞர்வாய்க் கேட்டறிந்ததையும், நூற்கள் மூலம் தெரிந்ததையும் ஒரு சோத்திரட்டி "மோகனா அல்லது மோசம்போன தாராநாதன்" என்னும் நவீனகத்தைப் பெய்திருக்கின்றோம். அறிஞர்கள் அன்புடன் ஏற்று இன்புற ஓதித் திருந்துவார்களாயின், அதுவே

எமது சிரமத்திற்கும், கொண்ட கருத்திற்கும் ஒரு கைம் மாருகும்.

இது சிறு நூலாயினும், பெரிய விஷயத்தையடக்கிக் கொண்டு சிறந்த அனுபவத்தைக் காட்டுந்தன்மை வாய்ந் தது. இதில், தாராநாதன் ஆரம்பத்தில் அறிவிழந்து பெருந்தவறிழைத் தானுயினும், உண்மை யுணர்ந்தபின், ஒழுக்கந்தவருதுமேம்பட்ட நிலைமையடைந்ததும்; ரோகணி தேவியின் ஒழுக்க நலமும், கற்பின்தூய்மையும்; இந்திர நாதன் விடனும் இளைஞனுயினும், மோகனுவின் மோகச் செயலுணர்ந்ததும் சட்டெனவிலகி அவள் நட்பை அந்நிமி ஷமே கைவிட்டுநீங்கிய நேர்மையும்; மோகனு தன்மோச குணத்திற்கேற்பக் கடவுளால் நன்கு தண்டிக்கப்பட்டு மான மிழந்து மதிகெட்டு நிர்க்கதியாய் அவதியுற்று வருந்தியது மான விஷயங்களைப் படிப்பதற்கு இனிமைபயக்கவும் அறிவு திருந்துதற்குமாம்படி நன்ருக அமைக்கப்பட்டிருக்கிறது.

இத்தகைய நன்முயற்சியில் எம்மை ஈடுபடுத்தி முற் றுப் பெறுவித்த எல்லாம்வல்ல இறைவர்க்கு எமது மன மொழி மெய்களால் வணக்கங் கூறுகின்ருேம்.

இதனை அச்சிட்டு முடிக்கும்போது எம்முடனிருந்து சிரமங்கருதாது புரூப் முதலானதுகள் திருத்தியும், விஷய வொழுங்கமைத்துந் தந்த எமது தமிழறி நண்பர். ஸ்ரீமான் சி. கு. நாராயணசாமி முதலியாரவர்கட்கும்; தற்சிறப்புப் பாயிரமெழுதி உபகரித்த ஈரோடு மகாஜன ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர். ஸ்ரீமான் E. V. அப்பாவு முதலியாரவர் கட்கும், எமது அன்பார்ந்த நன்றியறிதல் என்றும் உரிய தாகும். சுபம்.

கதா சாகரம் பிரதர்ஸ் நிலையம்,
தெலுங்கு பிராமணர் வீதி,
கோயமுத்தூர், 1-4-24.

**K.** கிருஷ்ணசாமி.

# தற்சிறப்புப் பாயிரம்

ஈரோடு மகாஜன ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்
திருவாளர். ஈ. வி. அப்பாவு முதலியாரவர்கள் எழுதியது.

நவீன நாகரீகம் மிக்கு விளங்கு மிக்காலத்தே 'நாவல்' என்பதை யறியாதார் இல்லையென்றே சொல்லலாம். எனினும், அது இன்னதென ஈண்டு விளக்குதலுந் தவறாகா தெனக் கருதுகின்றேன். நாவலென்பது புதுவது புனைதலாகப் பல நீதிகளையும் உலகானுபவங்களையும், உண்மைக் காதல் முதலிய பல திறங்களையும் பெறச் செய்யப்படுவ தொருகதை. இப்பொழுது நந்தேயத்தில் ஆயிரக்கணக் கான நாவல்கள் வெளிவந்துலவுகின்றன. அவற்றில் பெரும் பான்மையான நாவல்கள் அறிஞர்களால் ஒப்புக்கொள்ளக் கூடாத விதமாக யெழுதப்பட்டிருக்கின்றன வென்பதைப் பலரும் நன்கறிவர். சில, இளைஞர்கள் மனதைக் கவர்ந்து தீ நெறிக்கண் இழுத்துச் சென்று காதலென்னுங் கடலுள் ஆழ்த்தி அமிழ்த்தி விடுவனவாயு முள்ளன. சிற் சிலவே செம்பாகமான நடையுடன் சீரிய நீதிகள் செறியப் படிப் பார் மனதைப் பரவசப்படுத்தி நன்னெறிக்கணுய்த்துத திகழச் செய்வனவாயுள்ளன. இந்நாவலும் இவற்றி லொன் றென்று சொல்லுவது மிகையாகாது. இதன் ஆசிரியர் இதற்கு முன்னமேயே இரண்டொரு நாவல்களை இயற்றி யுள்ளார். அவைகளில்ஒவ்வொன்றும் ஒன்றற்கொன்று ஏற்ற முடையதாகவே மிளிர்கின்றது. உரியவிடங்களில் அமைதி

யுள்ள நீதிகளை முன்னோர்கள் நூலின்கணின்று மெடுத்து அமைத்து அவற்றின் திண்ணிய கருத்துக்களை அவ்வப் பாகத்தமைத்துள்ள கதைப்பாகங்களால் நன்கு விளக்கிச் செல்கின்றார்; இதன் ஆசிரியர் சரித்திரங்களை ஆய்ந்து முறையுடனெழுதவல்லுநரென்பது இத்தேயமறிந்ததொன்றே. அவற்றைப் படித்தறிந்தோர் இப்பொழுது நாவலெழுதுவதிலும் நல்லாற்றலுடையவராகத் திகழ்கின்றாரென்பதை இதனைப் படிப்பதால் உணர்ந்து மகிழாதிரார். அய்யரவர்களால் எழுதப்பட்டுள்ள நாவல்களில் இது "பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையில்—ஏதில் பிணந்தழீ இயற்று" என்ற நம்பெரு நாவலர் திருவாக்குக் கிணங்கத் தேச முன்னேற்றத்திற்குப் பெருந் தடையாயுள்ள கபடநாடக வேசிகளின் கூட்டுறவை அடியோடொழிக்கவேண்டுமென்ற பெருநீதியைப் பசுமரத்தாணிபோல் நிறுவுவதுடன், நவீன நாகரீகத்தால் விளையும் தீமைகள், 'கெடுவான் கேடுநினைப்பான்' என்பது போன்ற பழமொழிகளின் கருத்துக்களாதியவைகளையும் நன்கு எடுத்துக் காட்டுகின்றது. இதனைப் படிப்போர் மேலும் மேலும் இது போன்ற நூற்கள் பலவற்றை இதன் ஆசிரியரியற்றி யுலகிற் குபகரிக்குமாறு பெரிதும் அவரை ஊக்குவார்களென நம்பி இச் சிறு முகவுரையை இத்துடன் முடிக்கின்றேன்.

சுபம்! சுபம்! சுபம்!

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| முகவுரை | ... ... ... | i |
| தற்சிறப்புப் பாயிரம். | ... ... | ii |
| அத்தியாயம் | | பக்கம். |
| 1. தோட்டமும் காட்சியும் | ... .... | 1 |
| 2. நட்பும் காதலும் | ... ... | 6 |
| 3. வியாதியும் விவாகமும் | ... ... | 14 |
| 4. அறியாமையும் சாகஸமும் | .... | 21 |
| 5. ஏமாற்றமும் மோசமும் | ... ... | 32 |
| 6. மனைவியின் அன்பும், கணவனின் திருந்திய செயலும் | ... .... | 37 |
| 7. தன்வினை தன்னைச்சுடும் | ... ... | 42 |

# மோகனை

## அல்லது

# மோசம்போன தாராநாதன்

## முதல் அத்தியாயம்

### தோட்டமும் காட்சியும்

பொன் கொழிக்கும் போகபூமிகளில் இந்தியா தலைசிறந்த வீறுடையதென்பது உலகமறிந்ததோருண்மை. நம்மையாளும் ஆங்கில அரசரின் இராஜதானிகளாக விளங்குகின்றவை வங்காளம், பம்பாய், சென்னை. இம்மூன்றிலும் முதன்மைபெற்றது வங்காளம் என்ப. இது ஹௌரா, கல்கத்தா என்ற பெயர்களுடன் வழங்கப்படுகிறது, இத்தலை நகரம், கல்வியிலும் நாகரீகத்திலும், செல்வத்திலும், வியாபாரத்திலும் சிறந்து, தேசாபிமானத்திலும் முதிர்ந்து, தனக்கொப்புயர்வின்றிச் சிறந்து மேம்பட்டு விளங்கும் பெருமைவாய்ந்தது. இத்தகைய சிறப்புடைய திருநகரத்தின் பலபாகங்களிலுமுள்ள் பூந் தோட்டங்களில் "டேல்ஹௌஸ் ஸ்கோயர்" (Dalhouse Square) என்னும் சிங்காரத் தோட்டம் வெகு அழகும், ரமணீயமும் வாய்ந்தது. இத்

தோட்டத்தின் நான்கு புறத்திலும், ஆங்கில நாகரீகத்தின் அறிகுறியாகிய மின்சாரவண்டிகள் நூதனமாதிரிகளில் நகர மாந்தர்களை ஏற்றிக்கொண்டு சதா தெருக்களில் ஓடிக்கொண்டிருக்கும். இவைகளின் காட்சியும் நாகரிக வாசிகள் நாஞ வித உடை தரித்துப் பலவகை வாகனங்களில் ஊர்ந்து அவ் வழிச் செல்லும் விநோதமும், தோட்டத்தின் எதிர்ப்பக்கங்களில் மலை போன்ற பெருங் கட்டிடங்கள் வானளாவி நிற்கும் வியப்பும், கண்டார் கண்களுக்குப் பெரு விருந்தாய்ச் சிறந்திருந்தன ; இன்னும் அத்தோட்டம் விசாலமாய்ப் பரந்து பல வகைப் பூஞ்செடிகளையும், ஆங்கில நாட்டு அதிசயம் வாய்ந்த பல நிறமலர்க் கொடிகளையும், தன்னுள் உடைத்தாய், தன்னில் வந்து தங்குவோர்களின் தாபத்தையும் தணிக்க வல்லது. இத்தகைய மகிமைவாய்ந்த இம்மலர்த் தோட்டத்தின் தென்பாரிசத்தில் விஸ்ராந்திக்காகப் போடப்பட்டிருந்த சாய்வுப்பெஞ்சொன்றில் பதினெட்டே வயதுடைய தருணி யொருத்தி ஒய்யாரமாய் வீற்றிருந்து சுற்றிலும் காணப்படும் காட்சிகளை மனச்சந்துஷ்டியுடன் நேத்திரானந்தமாய்ப் பார்த்துக்கொண்டிருந்தனள். இவள் அழகிய உருவமும், மின்னற் கொடிபோன்ற காந்தியும், பொருந்திய அங்கங்களும், எடுத்த தன பாரமும் உருண்ட முகமும் நீண்டு பரந்த கண்களும் கார்மேகம்போற் கறுத்து விரிந்தடர்ந்த கூந்தலும் காமத்தை வெறுத்த கடுந்தவசிகளின் மனத்தையும் அலைக்கவல்ல செயலுடையனவாய் விளங்கின. இச்சமயத்தில், மாலைச் சூரியன் அழகிய தனது பொற்கிரணங்களைப் பரப்பி அஸ்தகிரியில் வீழ்ந்துகொண்டிருந்தனன். ஆதவன் கதிர்கள் பட்ட விடமெல்லாம் பொன் முலாம் பூசி மெருகிட்டதுபோல் ஜ்வலித்துக் கொண்டிருந்

தன. அதே தருணத்தில் வேலைச் சாலையினின்றும் நீங்கிய 'தாராநாதன்' என்னும் வங்காள வாலிபனொருவன் தன்வீடு செல்வதற்கு அப்பூங்கா வழியே வந்துகொண்டிருந்தனன். அப்பொழுது அவன் திருஷ்டிக்கு மனோகரம் வாய்ந்து பெருமிதங்கொண்ட பாவனையில் அழகெலாந்திரண்டுருக் கொண்டு லாவண்ய நிதியாய் வீற்றிருக்கும் அவ்வனிதா மணி தோன்றினள். என்றுமில்லாதபடி அன்று அங்கு அதிசயவரவாய்க் கண்ட அவள் அரிய காட்சி அவனுக்கு மெத்தப் புதுமையும் வியப்புமாய்த் தொன்றியது. பிறர் மாதரிடத்துச் செல்லாத மனமும் அன்று அவள் பால் சென்றது. எங்குந் தங்காது தனது வீடு நோக்கிச் செல்லும் பழக்கமுள்ள கால்களும் தளர்ந்து நடைநின்றன. ஒரு முறைக் கிருமுறை பலமுறை பார்த்தும் அவன் அவா அடங்கிற்றில்லை. கடைசியாக ஒரு மலர்ச் செடியின் மறைவிலிருந்து அவளையே யுற்று நோக்கி அவள் அழகைத் தன் கண்களால் பருகிக்கொண்டிருந்தனன். அப்பொழுது அவன் கையில் வைத்துக்கொண்டிருந்த அழகிய புத்தகம் நழுவி விழுந்ததுங் கூட அறியாதவனாய் மெய்மறந்திருந்தனன். என்னே! காமத்தின் கதித்த செயல்? இங்ஙனம் மறைந்துநிற்கும் அவ்வழகிய வாலிபன் தன் மீது காதல் கொண்டு தன்னையே உற்றுநோக்கித் தன் அன்பைப் பெற அவாவி நிற்பதை யுணர்ந்த அவள் தெட்டெனத் தன் ஆசனம் விட்டிறங்கி அவனுக் கெதிரிலுள்ள மல்லிகைக் கொடியின் இளவரும்பைக் கொய்பவள்போல் அவ்வாலிபன் மீது தனது வேல் விழிகளை மெதுவாய்ச் செலுத்தினள். இருவர்களுடைய கண்களும் ஒன்றை யொன்று சந்தித்தன. இருவருள்ளத்திலும் அன்பு கொழுந்து விட்டு ஆர்வம்

பெருகிக் காதல் தலை யெடுத்து நின்றது. அச்சத்தாலும் நாணத்தாலும் இருவரும் கவரப்பட்டிருந்ததினால் ஒருவரும் வாய்திறந்து தங்களது கருத்தை வெளியிட முந்தினார்களில்லை. தாராநாதனுக்கு மனம் சலனப்பட்டு அமைதி பெறாது மீண்டும் அவளையே கவனித்துக்கொண்டிருந்தான். தன்னை அவள், கவனிப்பதிலிருந்து அவனுக்கு மேலும் உணர்ச்சி தோன்றி அவளை நன்கு கவனித்து நோக்கினன். அப்பொழுதவள் தன்னருகிலிருந்த எதனையோ நோக்கி புன்னகை கொள்ளத் தாராநாதன் அதென்ன வெனக் கவனித்தபோது அதுமாஞ்செடிமேற் படர்ந்த மல்லிகைக் கொடியெனக் கண்டனன். தான் கலாசாலையில் ஆங்கிலம் பயின்ற காலத்து அப்பாஷையில் வாசித்த கதைகள் இரண்டொன்று ஞாபகத்திற்குவர, அவ்வாறு ஒன்றைப் பார்த்துச் சிரிப்பது காதலுடையார்க்குரிய செயலென் றெண்ணி, அம்மங்கை தன்பால் அன்பு கொண்டுள்ளாள் என நிச்சயத்தான். ஆயினும், தாராநாதன் அதுவரையிலும் பருவம் வந்தமாதரோடு தனித்துப் பேசிப் பழக்க மற்றவனானதால், அவளோடு பேச மனந்துணிந்தானில்லை. இவ்வளவில் யாரோ இருவர் அங்குவந்ததினாலும், பொழுதுபட்டு இருட்டியதினாலும், அத்தோடு தன்செயலை நிறுத்தித் தன்வீடு சேர்ந்தனன்.

அன்றிரவெல்லாம் அவன் கண்களுக்கு நித்திரை வந்திலது. தன்னறையிலுள்ள புத்தகங்களை யெடுத்துப் படித்து நாழிகையைக் கழிக்க முயன்றனன். கை ஏடுகளைத் திருப்பிக் கொண்டு சென்றதே யொழிய மனம் அயர்ந்து அவன் விரும்பியதைச் செய்யவில்லை. பற் பலவாறு யெண்ணாத யெண்ணமெல்லாம் எண்ணி அவனது ஏழை நெஞ்சம் வீண்

மனோரார்ச்சியஞ் செய்தது. இரவு வெகுநாழிகைக்குமேல் சிறிது தூக்கம் வர அயர்ந்தானெனினும், அப்பொழுதும் அவள் அழகிய உருவமே அவன் கண்ணெதிர் தோன்றி அவன் மனத்தை மிக வாதித்தது. எவ்வகையிலும் நாளை அவளைக் கண்டு களித்து அவள் இனிய நேசங்கொள்ள வேண்டுமெனத் தீர்மானித்துக் கொண்டனன்.

> "போகந் தனங்கல்வி பொன்றவருங் கால மயல்
> மாதர்மேல் வைப்பவர் மனம்."

என்பது இவனளவில் பொய்க்கவில்லை.

# இரண்டாம் அத்தியாயம்

## நட்பும் காதலும்

பண்டு தொட்டு நம் முன்னோர்கள் கையாண்டு வந்த பழைய வழக்கங்கள் அனந்தம். அவைகள் தேர்ந்த கல்வியாலும், தெளிந்த அறிவாலும், முதிர்ந்த அநுபவத்தாலும், ஆராயப் பெற்று அங்கீகரிக்கப்பட்டுப் பழைமை பெற்ற நமது இந்து மதத்தோடு சேர்ந்து உரம்பெற்று உயர்வடைந்தனவாம். இந்நலங் கருதியே காலக்குற்றமும், வேற்றரசர் படை யெழுச்சியும், இவைகளை உருக்குலையாத வாறொழிந்தன. அன்று கண்டமேனி அழியாதிருக்கின்ற தென்ற கொள்கையும் இதனை உறுதிப் படுத்துவதாகும்.

அவற்றுள் விவாகமுமொன்று. சொந்த பந்துவில், நெருங்கிய குடும்பத்தில், குற்ற மற்ற விடத்தில் குணமும், குலமும், அறிவும் வாய்ந்த பெண்ணைப் பெற்றோர்கள் சம் மதத்தின்மீது குலாசார ஜாதியாசார விதிக்குட் பட்டு மணஞ்செய்துகொள்வது நமது பதிவு. வயது வந்த பாலர் பாலிகைகள் சந்தித்து மனதொருப்பட்டு அன்பு பெருகிய பின்னரே கலியாணம் முடிக்கும் ஆங்கில அனுசார வழக்கம் இந்துக்களாகிய நமக்கொவ்வாது. ஏனெனில், அறிவிலும் அநுபவித்திலும் உயர்கல்வியிலும் எவ்வளவுதான் மேம் பட்டிருப்பினும், இளைஞர் தங்களுக்குத் தாங்களே தக்க மனைவியரைத் தேர்ந்துகொள்வது ஒப்ப முடியாத விஷயம். மேலும், 'காமத்திற்குக் கண்ணில்லை' யானதுபற்றி அவர்கள்

மனம் கண்ட மாதரிடத்தில் கவனங்கொள்ளச் செய்யுமென்பதும் மற்றொரு காரணம்.

தாராநாதன் வங்காளிகளில் பிராமண வர்க்கத்தைச் சார்ந்தவன். கல்வியிலும் கனத்திலும் சிறந்தவன். ஒழுக்கமும் ஒருவாறுடையவன். அத்துடன் ஈகையும், ஜீவகாருண்யமும் வாய்ந்து, அழகும் பொருந்திச் செல்வத்திலும் சிறந்து இளமையுமுடையவனென்றால், இவன் வாழ்க்கை இன்புடைத் தென்பதை இயம்புதலும் வேண்டுமோ ?

இத்தகைய அதிர்ஷ்ட சீலனுக்கு வயது இருபது கடந்தும் இன்னும் மணம்முடியவில்லை. அழகும் செல்வமும் அமைந்து இளமையும்வாய்ந்து நல்லகுடும்பத்திலும் தோன்றிய இவனுக்குப் பெண்கொடுக்க ஒருவரும் இசையாதிருந்ததுபற்றியல்ல. தன் அருமை பெருமைகளை யுணர்ந்து தன் கருத்திற் கிசைந்து, கல்வியிலும் அழகிலும் சிறந்து, குற்றமற்ற குடும்பத்திலும் தோன்றிய அறிவுடைய நங்கையொருத்தி கிடைக்குமட்டும் தான், கலியாணம் செய்துகொள்வதில்லை யென்பது இவனுடைய எண்ணம். தந்தை பரலோகஞ்செல்ல, விதவையான தாயார் விவாகத்தைப் பற்றிப்பேசும் போதெல்லாம்,இவன், இப்பொழுது தனக்கு விவாகம் வேண்டாம். இன்னும் சிறிது நாள் செல்லட்டும். கல்விகற்றுப் பரீட்சைகளில் முதன்மையாகத்தேறி உத்தியோகத்தில் உயர்ந்த சம்பளம் வரட்டும் என்று சமாதானஞ்சொல்லி நிறுத்திவந்தனன். இவன் உள்ளக்கருத்தைக் கள்ளங் கபடற்ற அவன் தாய், எவ்வாறறியக் கூடும்? குடும்ப விஷயத்திலும், பிற காரியங்களிலும் அன்னை கூறிய வார்த்தைக்கு எதிர் பேசாது ஒழுகிவரும் தாராநாதன் விவாக விஷயத்தில் மட்டும் உடன்படாதிருந்தது, அவனது

பழக்க விரோதத்தால் நேர்ந்த துஷ்டச்செயலோ! போ கூழின் விசித்திரச் செய்கையோ நாமறியோம்.

மேனுட்டாராகிய வெள்ளையரில் வயதுவந்த பெண்ணும், புருஷனும் விவாக விஷயத்தில் தங்களது கருத்தைக் கள்ளமின்றி உள்ளதைச்சொல்லி உடன்பட்டு ஒழுகுவதைக் காணுந்தோறும், தாராநாதன் நம் மிந்து மதத்தில் இவ்விதம் நடந்துகொள்வதற்கு இசைவதில்லையே என்று வருந்துவன். முன் பார்த்தறியாத ஒரு மங்கையை மணஞ்செய்வதனுலுண்டாகும் பொல்லாங்கைத் தன் மாதா அறிய முடியாதவளாய் இருக்கின்றனளே என்று ஏங்குவன். அது அவள் பிழையல்ல. நம்மைப்போல் ஆங்கிலமுணர்ந்து இங்கிலீஷ் நாகரிகம் அறியாததேகாரணமென்று தானே சமாதானஞ் செய்துகொள்ளுவான். இங்கிலீஷ் கற்ற தன் தோழர்களோடு இது விஷயமாகச் சம்பாஷிக்கும்போதெல்லாம் நாகரீகம் சிறவாத இந்து மதக்கொள்கைகளைப்பற்றி தூஷித்து மகிழ்வான்.

பழைமை பெற்றதாய், நலங்குன்றுத தாய், ஏற்றஞ் சிறந்ததாய் எவராலும் அசைக்க முடியாத தாய்ப் பெருமை சிறந்தொளிரும் இந்து மதத்தின் அரிய நாகரிகத்தைக் கேவலம் சிறிது ஆங்கில முணர்ந்த இவன் எங்ஙனம் அறியக்கூடும்? நரி வாலைக்கொண்டு கடலாழம் பார்க்க முடியுமா!

இத்தகைய குறுகிய நோக்கமுடைய தாராநாதன், தன் அருமைத் தாயின் கருத்துக் கிணங்குவ தெங்ஙனம்? இவ்வாறு கலியாண விஷயத்தில் தாயார் கருத்துக் கிணங்காது தன் மனப்படி நடக்கத்துணிந்த அவன் கெட்ட குணத்தைத் திருத்துவது எவர்? பட்டலைந்து தெளியட்டுமென்று விட்டுவிட்டனள்.

வழக்கம்போல் காலங்காட்டும் கடிகாரம் அன்று மாலை யும் ஐந்து அடித்து முப்பது நிமிஷம் காட்டிற்று. மாலைச் சூரியன் என்றும் போல் அன்றும் மேற்றிசையில் வீழ்ந்த னன். நேற்றுப் பிரிந்த அக் காதலர்கள் இன்றும் தவறுது வரக்கூடுமென நினைத்து மேல் நடக்கும் அவர்கள் காரியங் களைக்காண அங்குச் செல்வோம். சென்னை நகரினும் சிறந்த ஆடவரும், பெண்டிரும் நானுவித நாகரீக உடைதரித்துத் தத் தமக்குரிய நண்பர் சுற்றத்தாருடன் விநோதமாய்ப் பொழுதுபோக்க அம்மார்க்கமாய்க் குஷாலுடன் சென்று கொண்டிருந்தனர். அவர்கள் கேலிக்கூத்தும் பரிகாசச் சம் பாஷணையும், விகடவிளையாட்டுக்களும் அநேகம். இவைகளை விட்டு அப்பாற் சென்ருல் அந்தோ! நேற்று நின்ற விடத்தி லேயே அவர்கள் இன்றும் நின்றுகொண்டு காதல்வசப்பட்ட வண்ணமாயிருக்கின்றனர். ஒருவரோ டொருவர் நெருங்கிச் சம்பாஷிப்பதில் நான் முந்துவதா! நீ முந்துவதா! என்ற வாத முடிவில் முதலில் பெண்ணே முந்திக்கொண்டனள்.

இனி இவர்கள் சம்பாஷிப்பதைத் தெளிவாய் உணர அவர்கள் அருகில் நெருங்கி உற்றுக்கேட்போம்.

பெண்:—ஐயா! தங்கள் உருவ அமைப்பும் தோற்ற மும், பெரிய வீட்டுப்பிள்ளை யென்பதை நன்கு தெரிவிக் கின்றது. அங்ஙனமிருக்க நாணமற்ற விடர்களைப்போல் தனித்திருக்கும் வயதுவந்த என்னை கெட்டயெண்ணத் துடன் நின்று நெருங்கி உற்றுப்பார்ப்பது நீதியாமோ! என் றனள்.

தாராநாதன்:—பெண்ணே! நான் கெட்ட எண்ணத் துடன் சமீபித்து உற்றுப்பார்ப்பதாக நீ நினைத்துக் கொண் டாலும், பொறுத்துக் கொள்வதில் இஷ்டமில்லை யாயின்,

மௌனமாயிருப்பது அல்லது எட்டிப்போவதுமேல். அதனைவிட்டு அதட்டிப் பேச முன்வந்தது முறையோ! நீயே கூறுக என்றனன்.

பெண் :—நான் அதட்டிப் பேசவரவில்லை. என் கருத்திற்குத் தாங்கள் இணங்குகின்றீர்களா? அல்லது பிணங்குகின்றீர்களா? என்பதை அறிந்து கொள்வதற்காகவே அங்ஙனம் கேட்டேன். குற்றமாயின் மன்னிக்கவும்.

தாரா :—மன்னித்த லென்பது கடவுட்டன்மை. அஃதிருக்கட்டும்; உன் பெயரென்ன?

பெண் :—என் பெயர் மோகனு.

தாரா:—மோகனம் என்பது நல்ல பெயர்தான்; ஆயின், உனது குணங்குறி செயல்கள் குற்றமுடையதாய்க் காண்கின்றனவே!

மோகனம் :—எனது குணம், குறி, செயல்கள் குற்றமுடையனவெனத் தாங்கள் எவ்வாறுணர்ந்தீர்கள்?

தாரா :—அச்சமும் நாணமும் பெண்களுக்கு ஒருகவசமென்பார்கள். "கூசும் நிலையில்லாக் குலக்கொடி கெட்டுவிடுவாள்" என்ற ஒரு பழமொழியுமுண்டு. அறையைவிட்டு அம்பலத்திற்கு வருபவள் நாணமுடையவளாவளோ? நாணம் எப்பொழுது தவறியதோ நாணயமும் தவறியதாகும். அதுப்பற்றிக் கூறியது.

மோகனம் :—தாங்கள் கூறுவது பழங்காலச் சம்பிரதாயம். அது இக்காலத்திற் கொவ்வாது. ஆங்கில வியாபகத்தால் நவநாகரீகம் நனிசிறந்து, சுதந்தரம், சமத்துவம், ஐக்கியம், முதலியன விரும்பப்படுகிற இக்காலத்தில் தாங்கள் கூறுகிற பாட்டி கதை மூடாசாரமாகும், "பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவல கால வகையினனே"

என்பது பிரசித்தமல்லவா? அவரவர் அந்தஸ்துக்கும், கல்விக்கும் ஏற்றவாறு பெண்கள் ஆடவரைத் தேர்ந்துகொள்ளக் காலம் நேர்ந்துவிட்டது. அக்கொள்கையைப் பின்பற்றி நான் நடக்கத்துணிந்தது குற்றமுடையதாகுமோ? ஆங்கில முணர்ந்த தாங்களே கூறுங்களென்று பகர்ந்தனள்.

தாரா:—இவனும் அக்கொள்கையை யுடைத்தானவன் ஆனதினால், அவள் கூறியதை ஆமோதித்தவனாய் அவள் நாகரீக மொழிகட்கு மிகமகிழ்ந்தவனாய் அவள்கொண்ட கருத்துமுற்றிலும் உண்மையும், கள்ளங் கபடற்றது மென அவன் கருதிக்கொண்டு, அங்ஙனமாயின், மெத்த நல்லது. நானும் பலநாள் வருந்தி எதிர்பார்த்து நின்றதும் இதனைத்தான். பழம் நழுவிப்பாலில் விழுந்த தென்பார்கள். அது நம்மிருவர் வகையிலும் பொருத்தமாகவே காண்கிற தென்றனன்.

மோகனம்:—அப்படி யென்றால் எனக்கொன்றும் விளங்கவில்லை. விவரமாக விளக்குதல்வேண்டும் என்றனள்.

தாரா:—பிரியமுள்ள மோகனா! என்னைப்பெற்றெடுத்த அருமைமாதா என்னை நெடுநாளாக விவாகம் செய்துகொள்ளும்படி கட்டாயப்படுத்தி வருகின்றாள். அவள் தேர்ந்தெடுத்தபெண், என் கருத்திற்கிசைந்த மனைவியல்லாதிருப்பதினால் நான் அவள் வேண்டுதலுக்குடன்படாது மறுத்து வருகிறேன். உன்னைக்கண்டு உன் வாய்மொழியைக் கேட்டபின்னர், என் அன்பிற்குரியவள் நீயே என்று அறியலானேன். இனி உன்னை யன்றி மற்றொருவரையும் மணக்கத்துணியேன். இது எனது உறுதி. உனதுசம்மதமென்ன?

உன்னுடைய முத்தான வாய்திறந்து ஒரு உத்தாரம்சொல்லுக என்றனன்.

மோகனம்:—தாங்கள் கருத்திற்கு நான்முற்றிலும் உடன்படுகின்றேன். ஆயின், நான் பொருள்தரும் பலரோடு போகம்புணரும் வேசையர்மரபினள் என்பது நீவிர் அறியீர் போலும் என்றனள்.

இவ்வாய்மொழி கேட்டதும் தாராநாதனின் அழகிய முகம் சுருங்கியது. மனமயர்ந்தனன். ஒன்றுந் தோன்றாது விழித்தனன். தனக்குக்கல்வியும் நாகரிகமும் அழகும் சிறந்தவள் எவளாயினும் மனைவியாகக் கொள்வதில் தடையில்லை. பழையாசாரமுடைய அன்னையைப்பற்றியல்லவா! கவனிக்க வேண்டியிருக்கிறது என்று சிந்தித்துக் கொண்டிருந்தனன்.

மோகனா:—இதுகண்டு இவ்வளவுதானா? தாங்கள் கற்ற ஆங்கிலக் கல்வியின் அறிவின் திறம்? நாகரீகத்தின் அறிகுறி? சீர்திருத்தத்தின் செயல்? எல்லாம் ஏட்டுக்கல்வியா யிருக்கின்றதே? பிரசங்கமேடையில்மட்டும் பிரபலப்பேச்சுப் போலும். அன்றியும், சாதியாசார மென்னும் மூடக் கொள்கையை இன்னும் கைவிட்டபடியாய்க் காணவில்லையே. அங்ஙனமாயின், நான் சென்று வருகின்றேன் என்று அங்கு நின்றும் எழுந்தனள்,

அதுகண்ட தாராநாதன், மோகனா! அதற்குள் என்ன இவ்வளவு அவசரப் படுகின்றனை? வாய்க்கு வந்தபடி என்னென்னமோ பேசிவிட்டனை? "பேதமை யென்பது மாதர்க் கணிகலம்" என்பார்கள். அது பொய்ப்படவில்லையே என்றனள். அதன்பின் இருவரும் குசுகுசுவென்று ஏதேதோ மெதுவாகப் பேசத்தொடங்கியதால் விஷயமொன்றும் செவிக் கெட்டவில்லை. ஆயினும், அவர்கள் அடிக்கடி

புன்சிரிப்பும் பெருஞ் சிரிப்புமாய்ச் சிரித்துக்கொண்டு இருந்ததினாலும், நெருங்கிப் பேசியதாலும் அவர்கள் வேற்றுமையொழிந்து அன்புகொண்டு ஐக்கியப் பட்டார்களென்று அறிந்துகொள்ள லாகேனும். இதற்குள் எதிரிலுள்ள போஸ்டாபீஸ் கடிகாரத்தில் மணி எட்டடித்தது. இருவரும் எழுந்து தோட்டத்தை நீங்கி அங்கு வாடகைக்காகக் காத்துக்கொண்டிருந்த "ரிக்ஷா" வண்டி~~யொன்றில் ஏறிக்~~ கொண்டு சென்றனர்.

## மூன்றும் அத்தியாயம்

---

### விரக்தியும் விவாகமும்

மோகனு யென்பவள் கல்கத்தா அப்பர் சித்பூரிலுள்ள 'கோஹர்ஜான்' 'மல்லிஜான்' 'தாராஜான்' முதலிய பற்பல இந்துஸ்தான் தாசிகளில் ஒரு குடும்பத்தைச் சார்ந்தவள். இவர்கள் தென்னிந்தியா விலைமாதர்களைப்போல் ஐந்து பத்துக்குத் தங்கள் அரியமானத்தை விற்று ஜீவிக்காமல் ஐயாயிரம், பத்தாயிரம், இருபதினுயிரம் ஆகிய பெருந் தொகை வந்தாலன்றிப் பிற ஆடவர் தங்களைத் தொடவும் சம்மதியாதவர்கள். இவர்களின் முக்கியதொழில் சங்கீதம்பாடிச் சம்பாதிப்பதே. இந்துஸ்தான் "கவாய்" கேஜ் 'டோமரி' முதலிய அரும்பாடல்களை எச்சுஸ்தாயில் ரவை ஜாதிகளுதிர இனிமையும் சம்பிரதாயமும், சமத்காரமுமாகப் பாடுவதில் வெகு சமர்த்திகள். அத்துடன் பேரழகும் பெரும் பணக்காரிகளுமாவார். இத்தகைய குடும்பத்தில் மோகனு தோன்றியவளென்றால், இவள், அழகும், அந்தஸ்தும் எத்தகையதாயிருக்கவேண்டும்? அன்றியும், இவள், மார்வாடி வித்தியாலயத்தில் ஹிந்தியும், குஜராத்தியும், பழுதரக் கற்று ஆங்கிலத்தில் பாஸும் செய்திருந்தனள். இதனுல் இவள் தன் குலத்தார்களைவிட ஆங்கிலத்தில் விற்பத்தியும், வித்தியார்த்தியுமாய்விளங்கியது பின்னுமொரு விசேஷம். ஆயினும் மோகனம் தனது கல்வியை முடிப்பதற்குள் தனக்காதரவாகவிருந்த அன்னையும், தமக்கையும், தனக்கு பின்துணையாக

விருந்த மற்றிருவரும், தன்னை மட்டும் தனித்து விட்டு விண் சென்றது பெரிதும் விசனிக்கக் கூடியவிஷயம். பிறர் உதவி தவறிய இவள், தனக்கு வேண்டுவதைத் தானே தேடிக் கொள்ளவேண்டிய வளானுள் என்பதாகியவிவரங்கள், தாரா நாதனுக்குத் தெரியவந்தன. தான் மிக நொந்துபட்டதால் சித்பூரைவிட்டு அலிப்பூருக் கருகிலுள்ள சௌரங்கியில் சிறுபங்களாவொன்றை அமர்த்திக்கொண்டு அதில் அவள் தனித்து வசித்து வருவதையும் அறியலானுன். அதுமுதல் தாராநாதன், பிரதிதினமும் தன் அலுவல் வேலை நீங்கலாக அவளில்லத்துக்குச்சென்று வந்தான். தாராநாதனுக்கு அவ ளுடன் சரஸமாய்பேசிச் சல்லாபிப்பதும், சார்ந்துநிற்பதுமே இன்பநிலையின் உயர்வென்பது அவனதுமுடிந்தசித்தாந்தம். மோகனுவுக்கும் தாராநாதன் மீது மிக்க ஆசையுண்டு; அவன் இளமையும், அழகும் வாய்ந்த செல்வனுமன்றோ? மேலும், ஆங்கிலத்திலும் வித்தியார்த்தி. இவளும் அழகியும் விநயமும் வாய்ந்து இங்கிலீஷிலும் உயர்ந்தவளல்லளோ? ஆகவே, இருவர் மனமும் ஒன்றுபடுதல் சாதமே. "கற்றுறைக்கற்றுர்" காமுறுவதும் இயல்புதானே. இதிலென்னெ வியப்பு?

இங்ஙனம் அன்பென்னும் நாரால் பிணிக்கப்பட்ட அவ்விருவர்களும் உடலும், உயிரும் போலும், பூவும் மணமும் போலும் பொருந்தி இருமனமும் ஒருமனமென ஒன்றுபட்டு அந்நியோன்னியமாய் நேசித்து வந்தனர். ஆயின், இவர்களிடத்துப் பொதுவாகக் குற்றமென்பதே கூறமுடியாது. தாராநாதன் சத்தியசீலன். மோகனு உத்த குணமுடையவளெனக் கூறுகின்றனர். இருவரும் விவாகம் முடிந்தபின்பே தேகசம்பந்தம் வைத்துக்கொள்வதென்ற நியமத்துடனிருந்து வந்தனர். இடையில் நிற்கும்ஜாதிவேற்

றுமையே இவர்கள் விவாகத்திற்கு இடையூருயிருந்தது. தான் அந்தணர்குலத்தில்தோன்றியதே தவறென்றும், அதிலும் தன் அன்னையினுடைய மூடாசாரம் முழுமோசமானதென்றும் தாராநாதன் எண்ணியெண்ணிவருந்துவான். மோகனுவுக்காகத்தன் ஜாதியை யிழப்பது தவறல்லவென்றுஒருபோது துணிவன், மறுபோது அதனைத் தன் அன்னை அறிவாளாயின் துக்க மிகுதியால் இறந்துவிடுவாள் என்றஞ்சிவாளாவிருப்பன். தாய் சொற்றுறந்து அவர்களைப் பெரிதும் அலைத்து மனதைப் புண்படுத்துகின்ற இக்காலத்துச் சில வீண் பிள்ளைகளைப் போலில்லாது தாராநாதன் ஆங்கிலக்கல்வியின் வசப்பட்டிருந்தும் அறிவு தவருது அம்மட்டும் அன்னையின் ஆணைக்கடங்கி நடந்து வருவது அதிசயிக்கத் தக்கதே.

இங்ஙனம் இரண்டொருமாதங்கள் கழிந்தன. "குணத்தைமாற்றக் குருவில்லை" யானதால் மோகனு தன் குலாசாரப்படி நாளடைவில் பெருந்தொகைகளைச் சிறுகச் சிறுக ஆடைக்கென்றும். ஆபரணத்திற்கென்றும், தாராநாதனிடத்துப் பெற ஆரம்பித்தனள். தாராநாதன் அவள் அன்பின் வசப்பட்டிருந்ததினுல் அவன் நயவஞ்சகத்தை அறியாது அவளிஷ்டப்படி கொடுத்துவரலானுன். இதனிடையில் தாராநாதன் தாய் 'அசுவினி தேவிக்கு' ஒரு நாள், திடீரென்று மாரடைப்புப்போல் நோய் கண்டது. அந்நோய் அவளுக்கு விசனத்திஞலுண்டாயிற்ருே! வேறு காரணத்திஞலுண்டாயிற்ருே! வென்பதை நாம் அழுத்திக்கூற அருகரல்லோம். ஆயின், அன்றுமாலை நான்குமணிவரையும் நன்ருயிருந்தவளுக்குத் தீடீரென மாரடைப்புக்கண்டதைக் கவனித்தால், தன் அருமைமகனின் ஒழுக்கந் தவ

றிய செயலைக் கேட்டதினலுண்டாகிய மனோவேதனையின் வேகமே வியாதிரூபமாகத் தூலித்ததென்னலாம். மூன்று நாளாயிற்று வியாதி தணிந்தபாடில்லை. தமிழ்வைத்தியன் தாதுபார்த்துத் தவறுவது திண்ணமென்முன். அந்நிலையில், அசுவனி தேவி அதைரியப்பட்டுத் தம்மகனை அருகிலழைத்து 'அப்பா! குழந்தாய்! என்னுயிர் நீங்குந் தருணம் இன்றோ! நாளையோ! மற்றெச்சமயமோ! என்ற நிலைமையிலிருக்கின்றது. தாய்க்குத் தலைமகனுகிய உன்னிடத்து நான் வைத்துள்ள அன்பின்பெருக்கு இனைத்தெதன உனக்கே நன்ருகத் தெரியும். உன் தந்தை இறந்தாரேனும், "தந்தையோடு கல்விபோம்" என்ற குற்றத்திற்குன்னை உள்ளாக்காது தக்கவாறு படிக்கவைத்து உத்தியோகத்திலும் உயரச் செய்தேன். நீ விரும்பியதைப் பெறுவதற்கு வேண்டிய போது உனக்குப்பண முதலியன உதவி உன் இஷ்டப்படி நடக்கவும் விட்டேன். என் அருமைமகனே! ஆருயிர்ச்செல்வமே! இப்பொழுது உன்னைத்தனியேவிட்டு நான் எவ்வாறு பிரிவேன்? எங்ஙனம் ஆற்றுவேன்? பெற்ற மனம் பித்தடைகின்றதே! என்று புலம்பிக்கூறிக் கண்ணிரும் வடித்தனள். தாராநாதன் தைரிய நெஞ்சமும், திடச்சித்தமும் வாய்ந்தவனெனினும் தன்னை ஈன்றெடுத்த அருமைத்தாய் அத்தீன நிலைமையில் மனந்தளர்ந்து அங்ஙனம் அழுவதைப் பார்க்க இளகிய அவனெஞ்சம் நிலை தளர்ந்து அழுதறியாத அவன் அரிய கண்களினின்றும் நீர்தளும்பி கன்னத்தில் வடிந்து மார்பை நனைத்தோடியது. மறுபடியும், தன் அன்னை தாழ்ந்த குரலில் 'தாராநாதா! நான் உன்னையொன்று கேட்டுக் கொள்ளுகிறேன், அவ்விதம் செய்து முடிப்பையோ' என்றனள். அவன் பதிற் கூறவில்லை. அன்னை மீண்டும் எளது

அருமைக்குழந்தாய்! நான் இடும் கட்டளை எதுவாயினும் நீ இதுவரையிலும் மீறி நடந்தாயில்லை. இப்பொழுது உன்னை ஈன்றவளின் சொல்லைக்கேட்டு நடப்பதில் ஆலஸ்யமேன்? என்றனள். தாராநாதன் இந்நிலைமையில் தன் தாய் வேண்டுவது எதுவாயிருக்கும் என்பதை யோசித்துக் கொண்டிருந்தானே யல்லது கடக்கவேண்டு மென்பது அவன் கருத்தல்ல. மீண்டும் அன்னை, என் அருமைக்குமார! நான் கேட்பது உன் காதில் விழவில்லையா! அகத்திலுள்ள ஆருயிர்பிரிந்து போகுந்தறுவாயிலுள்ள உனது அன்னையின் இஷ்டத்தைக் கடக்கவேண்டியது ஞாயமெனக் கருதுகின்ளுயோ? கல்லாத பிள்ளைகள் கூடத்தங்கள் பெற்றவரையே போன் போடு மரியாதை செய்யப் பார்த்திருக்கின்றேன். கணக்கற்ற பொருளைச்செலவழித்துக் கட்டுக்கட்டாகப் புத்தகங்களைப் படித்த பயன் இதுதானு! உன்னைப் பெற்றுப் பேணி வளர்த்துப் படிக்கவைத்து, நான் பயனடைந்தது போதும் என்று மீண்டும் பொருமிப் புலம்பியழுது நொந்தனள். அன்னையின் அவ்வார்த்தைகள், கூரிய அம்பைப் போலும் தன் நெஞ்சைத் துளைத்தன. அவன் இளகிய மனம் நைந்திரங்கி 'அம்மா! தங்கள் விருப்பத்தை விளம்புங்கள். தவருதுகேட்டு நடக்கிறேனென்ன!' அசுவனிதேவி அங்ஙனமாயின், என்னிஷ்டபடி ஒரு பெண்ணை நீ மணஞ் செய்து கொள்ள வேண்டுமென்பதே எனது பெரிய விருப்பம் என்றனள். தாராநாதனும் அப்படியே ஆகட்டு மென்றனன்.

இரண்டொருவாரத்திற் கெல்லாம் அசுவனிதேவிக்கு உடம்பு முற்றிலும் சொஸ்தமடைந்து தன்மனோபீஷ்டப் படி தன்மகன் விவாகத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்

தாள். தன் அன்னைக்கு அவ்வளவு சீக்கிரத்தில் தேகம் முற்றிலும் சொஸ்தமடைந்து விட்டதற்கு மிகவும் மகிழ்ந்தானெனினும், தன் அன்னைக்கு அளித்தவாக் குறுதியை நினைத்து மனம் வருந்தினன். தாராநாதன் நல்ல குணமும் சன்மார்க்கனுமாதலால், தான் சொன்ன சொல் தவர்ந்து விவாகம் மேண்டாமென்று விளம்ப அவனால் கூடவில்லை.

கித்தர்பூரிலுள்ள காளி கட்டத்தின் மேற்குத் தெருவில் பொருளிலும், பூஸ்திதியிலும் பெருமையிலும் பிரசித்தி பெற்ற 'கோவர்த்தன நாத்' என்னும் செல்வரின் ஸ்ரீமந்த புத்திரி 'ரோகிணிதேவி' என்னும் அருமைக்கன்னிகையைக் கடிமணம் புரிய நிச்சயித்தனர். அப்பெண் பேதைப்பருவங் கடந்து பெதும்பைப் பருவத்தை அடைந்து கொண்டிருந்தனள். கொழுநனைத் தெய்வம்போல்கருதி யொழுகுதற்குரிய இல்லறநூல்களையும், தன்குடும்பத்திற்குரிய கணக்கு வழக்குகளைப் பிறர் உதவியின்றித்தானே நடத்திக் கொள்ளும் கணித்தையும் இயன்றளவு குற்றமறக் கற்றிருந்தனள். தனக்கவசிய மில்லாத இந்தியா, இங்கிலாந்து, ஜப்பான் முதலிய தேசசரித்திரங்களையும், பூகோள, ககோள பூமி சாஸ்திரங்களையும், வான மண்டல, சூரிய மண்டல, நட்சத்தர மண்டல விளக்கத்தையும் கற்கவிரும்பி னாளில்லை. வணக்கம், பொறுமை, விநயம், அச்சம், நாணம், மடம். பயிர்ப்பு முதலிய அரிவையர் அடக்கத்திற்குரிய அருங்குணங்கள் சிறந்து அழகிலும் மேம்பட்டு கருத்த விழியையும் சிறுத்த இடையையும் கொண்டிருந்தனள்.

இத்தகைய அழகுவாய்ந்த ரோகிணிதேவிக்கும், தாராநாதனுக்கும் நல்லதொரு நாளில் சுபகால வேளையில் திருமணம் சிறப்பாகப் பலவித வைபவங்களுடன் நன்றாக

நடந்து முடிந்தது. பெண் ருதுவாகாத சிறுமியாயிருந்ததி னால் கலியாணமான முதல் வருஷம் தாய் வீட்டில் கழித்தி ருந்து பிறவடையாய்ப் புருஷன் வீட்டிற்கு வந்தபோது தாராநாதனுக்குத் தன்மனைவியைக் காணவும், அவளோடு சம்பாஷிக்கவும் சம்மதமற்றவனாயிருந்தனன். தன் கணவன் தன்மீது காதல் கொள்ளும் வண்ணம் மிகவும் விநயமும் பணிவுமாக நடந்து கொண்டுவந்தும், அவைகளை அவன் சிறி தும் கவனித்துக் கொண்டானில்லை. அவள் முயற்சியனைத் தும் பயனிலா தொழிந்தன. அஃதுணர்ந்த அவனது அன்னை அசுவனிதேவி, மகனும் மருமகளும் ஒன்றுகூடி ஒருமனப்பட்டு இல்லறத்தை இனிது நடாத்தும் பொருட்டு அவனுக்கு எத்தனையோ இதோபதேசம் செய்தும் விருதா வாயின. தன்னிஷ்டப்படியின்றித் தாயின்வேண்டுகோளின் பொருட்டுத்தான் கலியாணஞ் செய்துக்கொள்ள இசைந்த வனாதலின், ஆங்கிலமுணராது மேனாட்டு நாகரீகமற்ற தம் மனைவியோடு சேர்வது அவனுக்கு விருப்பமற்ற தாயிருந் தது. இவன் பொல்லாவிதி இருந்தவாறென்னே!

## நான்காம் அத்தியாயம்

**அறியாமையும் சாகஸமும்**

தனக்கு விவாகமாகி இரண்டு வருடங்களாகியும் தாரா நாதன் மோகனுவைச் சந்திக்கும் வழக்கத்தை விட்டா னில்லே. நாள் தவறினும் தான் தவருது மாலே ஐந்திற்கெல் லாம் முதனுள் நிர்ணயித்துக் கொள்ளுகிறபடி "ஹௌரா ஸ்டேஷன்" 'டேல்ஹௌஸ் ஸ்கோயர்' 'ராதாபஜார்' 'சீல்தா' 'கிளேவ் தெருவு' ஆகிய இவ்விடங்களில் எங்கே னும் ஒன்றில் சேர்ந்துகொண்டு ஆங்கில நாகரீகத்தைப் பின் பற்றிக் கைகோர்த்த வண்ணம் உலாவிப் பேசிக்கொண் டிருப்பார்கள். ஆனுல், அவர்கள் தம்முள் கலப்பற்ற சந் தோஷத்தை யடைந்தார்களென்று சொல்லத் துணியோம். ஏனெனில், மோகனு குணத்திலும், கருத்திலும், தினேதினே மாறு படலானுள். தங்களது சம்பாஷணேயினிடையில் ஏதேனும் தர்க்கவாதம் நிகழுமாயின், தாராநாதன் ஆமென்று சொல்வதையெல்லாம், மோகனு அல்லவென்று மறுப்பாள். போதாவற்றிற்குத்தான் கற்ற நூல்களிலிருந்து உதாரணங்களே யெடுத்துக் காட்டித் தான் மறுப்பது சரி யான வகையே என்று ஒரே பிடிவாதமாய்ச் சாதிப்பள். தாராநாதன் அது அப்படியல்ல. நீ கூறுவது தவறு என்று தான் படித்த புத்தகங்களிலிருந்து தக்க பிரமாணங்களேக் கூறிமெய்ப்பிக்கினும் அப்புத்தகங்களே எழுதியவர்கள்உலகா னுபவமும் உண்மையும் கண்டுணரா மண்டூங்களென்று ஒரே

வார்த்தையில் மோகனு சொல்லி அவன்வாயை மூடிவிடுவள். தாராநாதன் மீண்டும் பேசத் துணிவானாயின், மோகனு பெருங்கோபங் கொள்ளுவள். இவர்கள் இங்ஙனம் தம்முன் மாறுபட்டார்களெனினும், தாராநாதன் மோகனுவின் கல்வியையும், கசடறப்பேசும் வன்மையையும், விவேகத்தின் விரிவையும், அழகின் அதிசயத்தையும் வியந்துகொண்டு அவள் மனது வருந்தாவண்ணம் நயமாய் நடந்துகொள்ளுவன். இவன் விரும்புவது கல்வி யொன்றுதானே.

மோகனு வசித்துவந்த சிறுபங்களா வாடகை வீடாயிருந்தது. அது தனது கௌரவத்திற்குக் குறைவான செயலென்றுணர்ந்த தாராநாதன், அதற்கடுத்தாற்போல் பெருவிலை மதிப்பில் அழகிய பங்களாவொன்று புதிதாய்க் கட்டி அதில் மோகனுவைக் குடிபுகுத்தினன். மற்றும் அவள் அவ்வப்போது விரும்பிய அணிபணிகள்யாவும் குறைவற வாங்கித் தந்தனன். தாராநாதன் வேறு பெண்ணை விவாகம் செய்துகொண்டு விட்டதினுல், இன்னுஞ் சிறிது நாளில் தன்னைக் கைவிட்டுவிடக் கூடுமென்றும், தனது ஸ்நேகம் வாய் வார்த்தைமட்டுந் தானுதலால், அன்பு குறைந்து விடுமென்றும் கருதிய மோகனு, இன்னும் அவனிடத்திலுள்ள பொருள்களை மெதுவாய்ப் பறித்து விடவேண்டுமென்னும் சூழ்ச்சி கருதித் தாராநாதனிடத்து அவள் ஒரு நாள், உல்லாசத்துடன் சம்பாஷித்துக் கொண்டிருக்கும்போது எனது அன்பனே யிர்! நீர் வேறு விவாகம் செய்துகொண்டிருப்பினும், நான் உம்மையன்றி மற்றையர் எத்தகைய சிறப்புடையாரா யிருப்பினும் அவர்பால் சிறிதும் காதல் கொள்ளே னென்றும், தங்கள் அருமைத் தோளோடு சேர்த்துக் கையோடுகைகுலுக்கிய என

திருகரங்களும் எனதுயிருள்ளமட்டும் பிறர்தோள் சேர்க்க உடன்படாதென்றும், தங்களுக்கே என் மீது மனம் உவந்து விவாகம் செய்துகொள்ள உடன்படும்போது தங்களோடு மருவி வாழத் தடையிராதென்றும், அங்ஙனம் இல்லையேல் என்னுயிருள்ளவும் நான் சந்நியாசியாகவே யிருந்து வாழ்வது திண்ணமென்றும் உறுதி கூறினள். அதனைத் தாராநாதன் நஞ்சுகலந்த வஞ்சுடைச் சொல்லென்று அறியாது அவைகள் அன்பின் உருக்கமும், ஆவல் பெருகிய காதலின் பிரவாகமென்றும் கருதித் தன்னுள் மிகமகிழ்ந்து கொண்டனன். அது முதல் அவள் கேட்டது எதுவாயினும் அட்டியின்றி அப்பொழுதே வாங்கித் தரலானன், 'அன்[redacted]ண்டோ அடைக்குந்தாழ்' இவ்வாறு அவள் பால் வைத்த அன்பின் மிகுதியால் அரிதில் ஈட்டிய அரும் பொருள்களை வரையரை யின்றிச் செலவு செய்துவந்ததால், பொருள் சுருக்கமடைந்து, முன்போல் இஷ்டப்படி செலவு செய்ய இயலாநிலைமையடைந்தனன். 'ஆனமுதலதிகஞ் செலவழிந்தால் மதியிழந்து மானங் கெடுவது' திண்ணமன்றே! என்னே! இவன் அறியாமை.

இவ்விவரங்களொன்றும் ரோகிணி அறியாள். ஆயின், வீட்டிலிருக்குந்தனம் நாளா வட்டத்தில் சிறு தொகையும் பெருந் தொகையுமாகச் செலவழிவதைக் காணும்போதெல்லாம் தனது கணவர் அன்னிய மாதொருத்தி மோகவலையில் வீழ்ந்து அறிவுதடுமாறி நடந்துவருவதை அறிந்தாளாயினும், தான் செய்யவல்லதொன்றுமில்லை யானதால், பொறுமைமேற் கொண்டு மௌனமடைந்து வந்தனள். ரோகிணி இப்பொழுது பக்குவ யுவதியாய்ப் பதினாறாம் பிராயத்தையுடைத்தாயிருந்தனள். இவளது நவயௌவனம் கண்

டார் கண்களுக்குப் பெருவிருந்தாயிருந்தது. இருந்தென்ன! அவளுடைய கணவன் கண்டுகளிக்காதவரையில் அவ்வழகுக்கு யாது பெருமை? மலரிலாத்தடாகம்போல் மாண்பற்றிருந்தது. அக்கம்பக்கத்தார் திருஷ்டிக்குத் தோன்றாது வாசற்படி கடவாது வீட்டினுள்ளேயே தனது எல்லாக்காரியத்தையும் குறைவறச் செய்துவந்தாள். ஒழிந்த வேளைகளில் சன்மார்க்கமும், பக்தியும் விளக்கவல்ல பல புராணக் கதைகளைப்பயின்று வருவள். கணவனோடு களிப்புடன் கூடிவாழவேண்டிய இக்காலத்தில் அவர் அன்பிற்குத்தான் அனன்யளாயிருப்பதற்கு வெகுவாகத்துக்கித்து வருந்தி ஏங்குவள். ஆயின், தன் கணவரது தகாச் செயலைப் பற்றித் தன் அருமை மாமி கடிந்துரைக்கும் போதெல்லாம் மாமியை வணங்கி, ஏன் அவ்வாறெல்லாம் பேசுகின்றீர்கள். ஏதோ பொல்லாக் காலத்தினுல் அப்படியெல்லாம் செய்கிறார் போலும். என்று மிகவும் பரிவும் பணிதலுமாகப் பேசிக்கோபம் அதிகரிக்கவிடாமல் அடக்கிவிடுவள். கற்புடைய மாதரின் கடமை அதுவன்றோ!

இங்ஙனம் இது நிகழ்ந்து வருகையில், ஆபீஸ் விடுமுறை நாளாகிய ஆதிவாரத்தின் ஒருநாள், தாராநாதன் வழக்கம்போல் மோகனுவைப் பார்க்கத் தனது பிரபுத்தன்மைக்குரிய உயர்ந்த ஆடைகளால் தன்னை நன்றாய் அலங்கரித்துக்கொண்டு கையிற் பிடித்த அழகிய பட்டுக்குடையுடன் தான் வசிக்கும் "பௌபஜாரை"விட்டு மெதுவாய் வெளிக்கிளம்பிப் பலதெருக்களைத்தாண்டி அலிப்பூர்ரோட்டு வழி நடந்து கொண்டிருந்தான். இயற்கையிலேயே அழகுள்ள அவ்வூர் அன்றொரு விசேடதினத்தை முன்னிட்டுப் 'பொன் குடத்திற்குப் பொட்டிட்டுப் பார்ப்பது' போல்

அத்தெரு முழுதும் நன்றாய் அலங்காரஞ் செய்யப் பெற்றிருந்தது. அவை பார்ப்போர் கண்ணையும், அறிவையும் கவரக் கூடியதாயிருந்தும் தாராநாதனது கவனம் அதிற்பதியாது, தான் குறிப்பிட்ட விடத்தையே நாடியபடி போய்க்கொண்டிருந்தனன். இங்ஙனம் சென்றவன் பத்து நிமிஷத்திற்கெல்லாம் சௌரங்கியில் "கோபிந்தசேன் கல்லி"யிலுள்ள மோகனாவின் பங்களாவை யடுத்தனன். அவ்வழகிய வீட்டின் முகப்பில் பெரிய பலகையொன்றில் தடித்தவெழுத்தில் "மிஸ்மோகனா" என்று எழுதப்பட்டிருந்தது. அவ்வீட்டினுள் மெதுவாக மெள்ள நுழையும்போது உள்ளே சிரிப்பும், பரிகாசமும், கேலிக்கூத்துமாய் உரத்த சத்தம் கேட்டது. தாராநாதன் இதென்ன விந்தையென்றெண்ணித் தயங்கிச் சந்தேகமனத்துடன் நடைக் கதவைத்திறந்து, மோகனா! என்றழைத்த வண்ணம் அறையினுட் புகுந்தனன்.

அழகிய அவ்வறை பலவித நாகரீக ஜப்பான் சாமான்களால் விதம்பெற நன்றாக அலங்கரிக்கப் பெற்றிருந்தன. தென் புறச்சுவற்றோடு சேர்ந்தாற்போல் சலவைக் கல்லாலாக்கிய மேஜை யொன்றும், அதனை அடுத்தாற்போல் தேக்குமரத்தாலாகிய இரண்டு நாற்காலிகளும் போடப்பட்டு, அம்மேஜையின் மீது உயர்ந்த கம்பளமும் விரிக்கப்பட்டிருந்தது. அல்லாமல், உயர்ந்த பீங்கான் சாமான்களும் லெட்டர் கேஸும், பிளாட்பேபரும், இங்கிபாட்டல் பென்ஸில்களும், தேதிகாட்டும் சிறு காலண்டர் பிரேமும், ஒழுங்குடன் அழகுபெற வைக்கப்பட்டிருந்தன. அத்துடன் காலங் காட்டும் கடியார மொன்றும், மேஜையின் மத்தியிலிருந்தது. மேஜைக்கு எதிர்த்தாப்போல் ஒருசாய்வு

நாற்காலியும், விலையுயர்ந்த ஒரு சோபாவும், அவைகளை யடுத்து இரும்பு ஸ்பிரிங்கட்டல், அஸ்மானகிரி தோம்தரா வுடன் விலைபெற்ற மக்மல் மெத்தை தலைகணிகளுடனும் போடப்பட்டிருந்தன. இவைகளன்றி ஆர்மோனியம், பிடில், வீணை முதலிய சங்கீதக் கருவிகளும், அங்குள்ள சுவர் முழுதும் பலவர்ண நானுவித சித்திரப்படங்களும் அவ்வறை யை அழகுபடுத்திக் கொண்டிருந்தன.

மேஜையருகில் போடப்பட்டிருந்த நாற்காலிகளில் ஒன்றில், தெருப்பக்கமாய்த்திரும்பி எதிரிலுள்ள ஜன்னல் வழியாய்த் தன் திருஷ்டியைச் செலுத்தியவாறு மோகனா வீற்றிருந்தாள். அப்பொழுது அவளது அழகிய நெடிய கூந்தல் அவிழ்ந்து, தோள்முழுதும் புரண்டு தரையைத் தொட்டுக் கொண்டிருந்தது. திடீரென வந்த தாராநாதன் வருகைக்கு அவள் அஞ்சினவளாய்த் தன்னோடு சம்பாஷி த்துக்கொண்டிருந்த தன் அன்பின்களஞ்சியத்தை விரை வாக மஞ்சத்தின் கீழ்மறைந்துகொள்ளும்படி சய்கை செய் தனள். அவனும் அவ்வாறே செய்தனன். இவ்வளவும் ஒரு நிமிஷத்தில் முடிந்தது. நடைக் கதவைத்திறந்து கொண்டு அறையினுள் பிரவேசித்த தாராநாதன், தனதுகளவைஎங்கு கண்டு விடுகின்றானோ என்றஅச்சத்தால், மோகனா அழகிய வதனம் ஒளியிழந்தும், நெஞ்சம் படபடவென்றும் அடித் துக்கொண்டிருந்தது. அவளருகில் நெருங்கிய தாராநாதன் அவளெதிரிலிருந்த நாற்காலியில் வீற்றிருந்து என்ன மோகனா! இன்று உன்முகம் பொலிவிழந்து வாட்டமுற் றிருக்கின்றதே! காரணமென்ன? உடம்பு ஏதேனும் குண மில்லையோ? இவ்விதம் முகம் வாடியிருப்பதேன்? வகை.

யென்ன? உண்மையை ஒளியாமல் என்னிடம் கூறலாகாதா? என்றனன். அதற்கு மோகனு நன்ருய்ப் பதில் கூருமல், ஒன்றுமில்லை யென்றுமட்டும் கூறி, மஞ்சத்தின் அருகிலுள்ள ஆர்மோனியத்தைப் பார்த்தபடி வீற்றிருந்தனள். தாராநாதன் திருஷ்டியும் அவ்வார்மோனியத்தின் மீது செல்ல, கண்மணீ! உன்னுல் ஆர்மோனியம் வாசிக்கக் கேட்டு ஒருவாரத்திற்கு மேலாயிற்று. என்மனதை யின்புறச்செய்ய உனக்கிஷ்டமானுல் சற்று பாடிக் கொண்டு ஆர்மோனியம் வாசி, உனக்குச் சிரமந்தராமல் வேண்டுமானுல் நானே ஆர்மோனியத்தை எடுத்து அருகில் வைக்கிறேன். என்றுஆசனம் விட்டெழுந்து ஆர்மோனியத்தை யெடுக்கச் சென்ருன். மெத்தையின் மீது விரிக்கப்பட்டிருந்த துப்பட்டி தனக்கு இடைஞ்சலாயிருந்ததினுல் அதனை விலக்கி ஆர்மோனியத்தை யெடுக்கும்போது தன் கால்பட அப்பொழுது கட்டிலின் கீழ் பதுங்கியிருந்த ஆள் யெழுந்து வெளிவந்தான். அவன் முரட்டுத் தேகமும், கரிய உருவும், குறுகிய வடிவும், தாராநாதனுக்கு அச்சத்தை அளித்ததெனினும், அதற்கஞ்சாது அவனை உறுத்து நோக்கினன். அவன் மோகனுவைத் திருஷ்டித்தனன். மோகனு அவ்விருவரையுந் தன் கடைக் கண்ணுல் கடாட்சித்தனள். தாராநாதன் முகஞ்சிவந்து, புருவம் நெரித்து, மீசை துடிக்கப் பற்களைக்கடித்து, உதட்டைமென்று மோகனுவை நோக்கி! அடிவேசி! உன் குலத்தொழிலைக்காட்டி விட்டனையல்லவா? வேம்புக்குப் பாலைவார்க்கினும் அதற்கியற்கையாகவுள்ள கசப்பு மாறுமா? எட்டிக்கனியில் இனிப்பை விரும்பினுல் கிட்டுமா? உன் குணமறியாது மோசம் போனேன்? பற்றுள்ளவளைப்போல் பாசாங்கு காட்டிய

உனது பரமபாவனை யனைத்தும் மெய்யென்றிருந்தேன். அத்தனையும் பொய்யாய்க் கண்டது. அடிகள்ளி! காதகி! கருணையற்ற பாதகி! உனதுசெயல் வெகுநன்று. என்று கடுமொழி கூறிக்கனன்றனன். அதுகேட்ட அவள்தானொன்றும் அறியாதவள்போல் என்ன சங்கதி யென்றனள்? கள்வன் கையிலகப்பட்டும் நீ இங்ஙனம் நடிப்பது முடியுமோ? இதோ இவன்யார்? என்று திரும்பியபோது நின்றிருந்தவனைக்காணோம். தாராநாதன், மோகனுவுடன் சம்பாஷித்துக்கொண்டிருந்த தருணமறிந்து அவன்மெள்ள நழுவிவிட்டான்.

துர்ஜனர் எவ்வளவுதான் உயரினும், அவர்கள் இயற்கைக்குணம் மாறுதென்பார்கள். அது உன் விஷயத்தில் பொய்ப்படவில்லை. மோகனு! உன்னுசை இன்றோடு ஒழிந்தது. நான் சென்று வருகின்றேன் என்று கூறித் தாராநாதன் எழுந்தனன். அதுகண்ட மோகனு, அங்ஙனம் எழுந்தவனைத் தடுத்துக் கையைப்பிடித்துத் தன் அருகிலிழுத்துச் சோபாவிற் குந்தவைத்து நீரெவ்வளவோ விவேகியும், விதரணையும் உள்ளவரென்று நினைத்திருந்தேன். நான் நினைத்தது பிசகாய்முடிந்தது என்றுள். அதென்னவென்று தாராநாதன்வினவ? மோகனு, "ஆடவர் எவ்வளவுதான் அறிவினுயர்ந்து உலகானுபவம் பெற்று, மேலான கல்வி நிலையைக் கைகொண்டிருப்பினும், அவர்கள் பெண்களைப்போல் பொறுமையிலும், நிதானத்திலும், சிறந்தவர்க ளாகமாட்டார்கள். தாழ்ந்த நோக்கமும், குறுகிய வெண்ணமும் அவர்களைவிட்டு நீங்குவதுகடினம், தங்கள் அன்பைச் சோதிக்க வேண்டுமென்ற கருத்துடன் எதிர்த்த வீட்டு

"இந்திரானந்தனை" தாங்கள் வருந்தருணமறிந்து வரவழைத்து மஞ்சத்தின்கீழ் ஒளித்து கொள்ளும்படி வேண்டி, ஆர்மோனியப் பெட்டியையும் அவனருகில்வைத்து தாங்கள் வந்ததும் முகம்வாடிய பாவனையுடனிருந்து ஆர்மோனியப் பெட்டியின்மீதே திருஷ்டி சாதித்துக் கொண்டிருந்தால், தாங்கள் சந்தேகித்து அதன்மீது உற்றுநோக்கி என்னை ஆர்மோனியம் வாசிக்கும்படி கேட்பீர்கள். நான் பேசாது மௌனமாயிருந்தால் தாங்களே எழுந்துசென்று அப்பெட்டியை எடுக்கச் செல்லுவீர். அப்பொழுது தாங்கள் கால்படப் பதுங்கியிருந்தவன் வெளிப்படுவான். உங்கள் மனதைப் பரிசோதிக்கலாம் என்று நினைத்தேன், அதன்படியேமுடிந்தது" 'நான் பரிகாசத்திற்காகச்செய்த விஷயத்தைத் தாங்கள் உண்மை யென்றுகொண்டு என்னைத் தகாத சொற்களால் வைததுமன்றி, எங்கள் குலத்தையும் அதிகமாகத் தூஷித்தீர். உண்மை யறியாதாரிடத்து எத்தனை நாட் பழகினும் முடிவில் வருத்தமாகத்தான் முடியும். என்று கூறி உள்ளத்தில் கள்ளம் வைத்துக் கண்ணீர் வடித்தனள். கள்ளங் கபடருணராத வெள்ளத் தன்மையுடைய தாராநாதன், அவளுடைய வாய்ச்சொல் அத்தனையும் உண்மை யெனக்கொண்டு, அவள் அழுகைக்குபொராது தான் தவறிக் கூறிய குற்றத்தை மன்னிக்கும் படி வேண்டுகொண்டனன். அவள் தாராநாதன் அறியாமைக் கிரங்கி வேண்டுதலுக் குடன்பட்டவள்போல் மோகனு மன்னித்தே னென்றனள். பின்னிருவரும் யொருவரை யொருவர் கட்டித்தாவி மனமார முத்தமிட்டுக்கொண்டனர். சந்தேகமும் சஞ்சலமும் அகன்றொழிந்தன. இருவர் முகமும் மலர்ந்து சந்தோஷம் தாண்டவமாடிற்று.

தாராநாதன் :—என் அன்புள்ள கண்மணீ! உண்மை உணராமல் சந்தேகித்து உன் மனதை வெகுவாய் வருத்தியதற்காக என்னை மற்றுமொருதரம் மன்னித்தருள வேண்டுமென்று வேண்ட, அவள் அவன் வேண்டுதலின்படியே மன்னிப்பதாகக் கூறி, அவன் அசட்டுத் தனத்திற்குப் பரிகாச ஆகந் தழுவி எச்சல் முத்தமொன்று இனிதாகத தந்தனள். பின்னர் இருவரும் பற்பல விஷயமாகப் பலவாறு பேசியும், பாடியும், படித்தும், சிரித்தும் நேரத்தை ஓட்டினர்.

வழக்கம்போல் வீடுசெல்ல மணி எட்டடித்ததும் தாராநாதன் யெழுந்து நாழிகையாகின்றது, நான் சென்று வருகின்றேனென்றனன். அதற்கு அவள் போய் வாருங்கள். ஆயின், ஒன்று கூறுகின்றேன். அதன்படி செய்தருளுங்கள் என்று வேண்டிக்கொண்டனள். அதற்கு அவன், அதுவென்ன கூறு செய்கின்றேன் என்றனன். மோகனு! ஒன்றுமில்லை. மெத்த அவசரமாக நாளைக் காலையில் ரூபா நூறுக்கு ஒரு செலவிருக்கிறது. அதுவும் இப்பொழுதே வேண்டும். இதுதான் சங்கதி என்று பகந்தனள்.

அதுகேட்ட தாராநாதன், அச்சமயத்தில் தன் கைவசத்தில் பொருள் வைத்திருக்கவில்லை யெனினும், இல்லையென்றால் எங்குமனம் வாடுகின்றனளோ என்று அவள் மீது வைத்த அன்பின் வாஞ்சையால் தனக்குத் தெரிந்த நண்பர் ஒருவரிடத்து அகால அவ்வேளையில் கடன் கேட்பது மதிப்புக் குறைவென்பதைக் கூடக் கவனியாது கைக்கடனாக அத்தொகையைப் பெற்று அவள் கையிற் கொடுத்துச் சந்தோஷமா? என்றனன். மெத்த சந்தோஷம். என்

அருமையை அறிந்து நடக்கும் மனங்கனிந்த துரை தங்களை விட வேறு யாரிருக்கின்றனர், என்று உபசாரங் கூறி நாளை மாலை ஐந்துமணிக்கு என்னை "பொட்டானிகல் கார்டனில்" தவறாது அவசியம் சந்திக்கவும். என்று கட்டளையிட்டுப் பிரியா விடைதந்தனுப்பினள். 'பொருட்பெண்டிரின்' நயவஞ்சகத்தை யாரே உணரவல்லர்?

# ஐந்தாம் அத்தியாயம்.

---

## ஏமாற்றமும் மோசமும்

எவ்வேலை எக்கேடு கெடினும், அதனை ஒரு பொருட்படுத்தாது அரிவையர் குறிப்பிடும் காலத்தில் அணுவும் குறையாது 'குறித்த காலந்தவறாது வருவர் காமுகர்' என்னும் அனுபவவாக்குப் பழுதுறாவண்ணம் தாராநாதன் நல்லுடை தரித்துத் தன்னை நன்றாய் அலங்காரஞ் செய்துகொண்டு "பொட்டானிகல் கார்டன்" (Bottaniaul Gardan) என்னும் பூந்தோட்டஞ் சென்று கங்கைக் கரையோரத்தில் புன்னை மரத்தடியில் ஒரு சாய்வு பெஞ்சில் வீற்றிருந்தான். மோகனாமட்டும் தான் கூறிய காலப்படி வந்தாளில்லை. ஐந்தாயிற்று மணியும். நிமிஷமும் பத்தாயிற்று. அரை மணியும் கழிந்தது. அப்பொழுதும் அவள் வந்தாளில்லை, வீட்டில் ஏதோ வேலைபோலும். விரைவில் வந்துவிடுவாளென்று எண்ணிய வண்ணம் தன் கைக்கெடிகாரத்தைப் பார்ப்பதும் கையிலுள்ள புத்தகத்தைப் படிப்பதுமாய்ச் சிறிது காலம் போக்கினன். மணி ஆறடித்தது; அப்பொழுதும் வந்தாளில்லை. உண்மை கூறியிருந்தாலல்லவோ வருவள். இவனுக்கு பொறுமையின் வரம்புகடந்து கோபம் எழுந்தது. மோகனா! மோகனா வென்று உரத்துக்கூவினன். அப்பொழுது அலையொழிந்து பிரவகிக்கும் கங்கையின் ஆற்றின் கரையில் மோதுகின்ற வெள்ளிய நீர்த்திவலைகள் இவன் அறியாமைச் செயலுக்குப் பரிகசித்து நகைப்பதுபோன்றிருந்தன. ஆயி

னும்செய்வதென்ன? பின்னும்வருவாளென்றநம்பிக்கையால் ஆங்குள்ள ஆற்றங்கரையையும் அலைமோதுகின்ற ஆர்ப்பரிப்பையும், பூந்தோட்டத்தின் மலர்வர்க்கங்களையும், பட்சிகளின் வேடிக்கைகளையும், குரங்குகளின் சேஷ்டைகளையும் கவனித்தான். அவைகளில் அவன் மனம் கவியவில்லையானதால், மனது ரமிக்கவில்லை. இதற்குள் மாலை 6-30 ஆயிற்று. வேடிக்கை பார்க்க வந்திருந்தாரும் வேலையாட்களும் தத்தம் வீடு நோக்கிச் சென்றனர்.

தான் மட்டும் தனிமையாயிருந்தனன். பௌர்னமி கழிந்த மூன்றுநாளாயிருந்ததினுல் முன்னிருட்டின் வருகை வெகு துரிதமாயிருந்தது. இனி இங்கிருப்பதில் பிரயோஜனமில்லை. மோகனு வராதிருப்பதற்குக் காரணம் யாதாயிருக்கலாமென ஆலோசித்தனன். ஒன்றும் புரியவில்லை. எதற்கும் நேரில் சென்று காண்பதே சிறந்ததென்று தீர்மானித்துக் கொண்டு அத்தோட்டம் நீங்கி ஆங்குள்ள படவுகளிலொன்றில் ஏறி அக்கரையை யடைந்து! 'ரிக்ஷா வண்டி' யொன்றில் அமர்ந்து 'கிளைவ்' தெருவழியாக 'அலிப்பூர்' சென்று மோகனு மாளிகையடைந்தனன். அப்பொழுது அவ்வீட்டில் பெரியவருஞ் சிறியவருமாயிருந்து பெருஞ்சல்லாபத்துடன் உரத்துப்பேசிச் சந்தோஷித்துக் கொண்டிருப்பதைக் கண்டு வியந்த சிந்தையனுய் இதுயார் வீடு? அவசரத்தால் தெருத்தவறி வீடு அடையாள மின்றி வந்துவிட்டோமா? இல்லையே! பல வருஷம் பழகிய எனக்கு அதுகூடவாதவறிவிடும். மோகனுவுக்குக்கட்டிக் கொடுத்த மாளிகை இதுவென்பதற்குச் சந்தேகமா? இவ்வீட்டில் இப்பொழுதுள்ளவர் யாரெனவிசாரிப்போம் எனத் துணிந்து

உள்ளே நுழைந்தனன். இவன் வரவுகண்ட அவ்வீட்டிலுள்ள ஒருவர் இவனைப்பார்த்து நீர்யார் எங்குவந்தீர்? என்ன சங்கதி என்றுகேட்டனர். தாரநாதன் தாங்களார்? புதியவர்களாகக் காண்கிறீர்கள்? இவ்வீட்டில் நேற்றிருந்த மோகனா எங்குச்சென்றனள்? என்று வினவினன்? அதற்கு அவர்-ஐயா! இன்று காலையில் இவ்வீடு அம்மாதால் எங்களுக்குக் கிரையஞ் செய்யப்பட்டுச் சுவாதினமுமாயிற்று. அவள் எங்குச் சென்றுளோ நாமறியோம் என்று பகர்ந்தனர். தாரநாதன், விடையொன்று கூறுவதற்கும், வேறு மொழிகேட்பதற்கும் இயலாதவனாகி அவ்வீடு நீங்கி வெளியே வந்து, அவ்வீட்டிற்குச் சற்றுதூரத்தில் சிறு கடைவைத்து ஜீவனம்செய்துவரும் வயோதிகரைக்கண்டு, ஐயா! மோகனா எங்குச் சென்றாள்? தங்களுக்கு ஏதேனும் தெரியவருமா? தயவுசெய்து கூறவேண்டுமென்றனன். அவர்: அதனை நீர் அறியீர்போலும். அவள் அவ்வீட்டை விக்கிரையம் செய்து அதிலுள்ள பொருள்களைத்தனையும் ஒன்றுக்குப்பாதியாய் விற்றுவிட்டு எதிர் வீட்டு இந்திரநாதனைத் துணைப்பற்றி காலை பதினொரு மணி பம்பாய் மெயிலில் ஏறிச் சென்றதாகக் கேள்வி. இந்திரநாதன் தந்தை தன்மகனைத் தேடிக் கொண்டிருக்கின்றரென்றும் கூறினர்.

அச்சொல் அவன்செவிப்பட்டதும்அவன்மனம்அடைந்த வேதனைக் கோரளவே யில்லை. எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி ஏங்கி மனம் புண்ணடைந்தது. அழகிய அவனது முகம் முழுதும் கறுத்து வேறுபட்டது. செய்வதின்னவென்று தோன்றாது மயங்கி நின்றனன். ஐயோ! "மோசம் போனேன்" என்றுவாய்விட்டுக்கூறிநெஞ்சயர்ந்தான். நேற்று

மாலையில் கண்ட காட்சி மெய்யாயிருந்தும் அதனை முழு தும் மறைத்து வேறுவகையா யுரைத்து நம்மை ஏமாற்றினள். அதுவன்றே! அவள் சாகஸத்தின் மேதகைமை. ஏமாற்றின தற்குப் பரிசாக ரூபாய் நூறும் நம்மிடத்துப் பெற்றனள். எனது அறியாமை யிருந்தவாறென்னே! நூறாண்டு பழகி னும் மூர்க்கர் கேண்மை பயன் தருமோ! அறிவுடையொரு வன் வேசியுறவை விரும்பிக்கொள்வனோ! அடி மடியில் நெ ருப்பைக் கட்டுவோர் அறிவீனரன்றோ? நான் அவர் வகை யில் சேர்ந்தவனாயினேன். எனது ஆங்கிலக் கல்வியும், அது பற்றி வந்த நாகரிகமுறையும் பிறர் கூறிப் பழிப்பதற்கேது வாயின. அன்னை யுரையும் அன்பார்ந்த மனைவியின் உபகா ரத்தையும் அறவே வெறுத்த எனக்கு இதுவா! இதனி னும் கொடிய துன்பம் வந்தணுகவேண்டும்.

தந்தைதேடிய அரும்பொற்கு வியல்களை ஒரு பயனு மின்றி வீணேசெலவழித்துத் தாய்க்கு பெருந் துயரத்தை யும், மனைவிக்கு மனவாட்டத்தையும் தந்த நான் ஒருவித்தி யார்த்தியல்லனோ! அடி மோகனா! நயவஞ்சகி! ஒன்றுமறி யாது கள்ளங்கபடற்ற என்னை ஏமாற்றி மோசம் செய்து ஓடிவிட்டனையே. ஒரு வருஷமல்ல! நான்கு வருஷம் நய வஞ்சகத்தோடிருந்து உண்மை அன்புள்ளவளாக நடித்து என் பொருள்களை யெல்லாம் கொள்ளைகொண்டு சுருங்கிய சமயமறிந்ததும், "சட்டி சுட்டதும் கைவிட்ட கதையாகச்" செய்து விட்டனையே! நஞ்சுகலந்த உன் வஞ்சக அன்பை மெய்யென்று நம்பியல்லவா மோசம் போனேன். பல பேசி ஆவதென்ன? கவிழ்ந்தபால் கலயமேறுமோ? ஆற்றோடு போனது அப்பாவென்றால் வரப்போகிறதா? வீண் ஆலோ

சனேயேன்! இத்தோடு இத்துஷ்ட நட்பை விட்டொழித்து நேரத்தில் வீடு செல்வதுதான் நலம். மாதர் போலிநட்பால் அடைந்தபலன் போதுமென்று கூறி மனமயர்ந்தவனுய்த் தளர்நடை நடந்து இரவு 9 மணிக்குத்தன் இல்லஞ் சேர்ந்தனன்.

## ஆரும் அத்தியாயம்

### மனைவியின் அன்பும், கணவனின் திருந்திய செயலும்

தாரா நாதன் வீடு சேர்வதற்கும், பஞ்சமி சந்திரன் உதயமாவதற்கும் காலம் ஒன்ருயிருந்தது. வயதுசென்ற அன்னை உணவருந்தி உறங்கிக்கொண்டிருந்தனள். மனைவி ரோகிணிதேவி மணவாளன் வரவுக்காக எதிர்நோக்கித் தெருநடையில் செம்பும் கையுமாய்க் காத்துக்கொண்டிருந்தனள். அச்சமயத்தில் கணவன்வர, அவரை எதிர்கொண்டு அழைத்துத் தனது இளங்கரங்களால் நீர் கொண்டலம்பி உபசரித்தனள். தான்செய்த தவறுதலுக்குச் சிறிதும் மனம்கோணுது உகந்தமனத்துடன் உபசரித்த அவளன்பிற்கு அதிசயத்த தாரா நாதன், மனங்கரைந்தவனுய்க் கனிந்த பார்வையில் அவளைக்கடைக்கண்ணுல் நோக்கினன். அது கண்டமனைவி அதிசயத்தவளாய்க் கலியாணம் நடந்து வருஷம் மூன்ருயும், தன்னை ஒருநாளும் கவனியாதகணவன், இன்று தன்னைக் கடைக்கண்ணுல் நோக்கியதற்கு ஏதோ காரணமிருக்கவேண்டும். எனக்கு நற்காலம் குறுகியது போலும், தான்நோற்ற தெய்வங்களுக்கு இன்றுமனம்இரங்கியதற்கும், மாமியின் ஆசிர்வாத பலம் சித்திபெற்றதற்கும் அகமகிழ்ந்தாள். காலலம்பப்பெற்றகணவர் வழக்கம் போல் சாப்பிடவராமல் உடுப்புக் கழற்றி ஒருபுறத்து வைத்துவிட்டுச் சாய்வுநாற்காலியில் சென்று மனவுறக்கத்தோடு வீற்றிருப்பதைக் கூடத்தில் எரியும் பெட்ரோலியம் விளக்கின்

வெளிச்சத்தாலுணர்ந்து உடம்புக்கேதோ குணமில்லைப் போலுமென்றெண்ணி மெதுவாக அன்னமென நடந்து அவரருகிற் சேர்ந்து பாதத்தடியில் குந்தி அழகிய தன்னிரு கைகளால் மெல்ல அவர் கால்களை வருடினள். மோகனுவின் மோசடியையும், ரோகிணியின் அன்பையும் கவனித்தபோது நெருப்பிலிட்ட புழுப்போல் அவன் மனது துடிதுடித்துத் தலை சுழன்றது. கண்களும் இருண்டன. அதனால் சற்று நேரம் கண்ணைமூடி அசைவற்றிருந்தான். ஒருவாறு மயக்கந்தெளிந்து நீர்வேட்கையுற்றதாக மொழிந்தனன். மனைவி சட்டெனச்சென்று நீர்மொண்டுவந்து கொடுக்க அருந்தி விடாய்தீர்ந்தனன். திரும்பவும் தன் மனைவியைவிழிதிறந்து ஊன்றிக் கவனித்தான். பதினாறே வயதுடைய ரோகிணி ரோகிணியாகவே பிரகாசித்தாள். அவள் நீலவிழியும், நிறஞ்சிறந்த அழகும், சாந்தமுகமும், தண்ணியபார்வையும் அன்றுதான் அவன் முதல்முதல் கண்டகாட்சியாகும். இத்தகைய நன்மணியை நாரியர் நாயகத்தைக் கவனியாது அவமே நாள்கழித்த தனது பேதமைக்கு மெத்தவருந்தி மனம் நாணினன். ஏதோ சொல்லுவதற்கு நாவெடுத்தான்; சொற்கிளம்பவில்லை; நாக்குழறிற்று. ஒருவாறு சீர்படுத்திக் கொண்டு, ரோகிணி! என்று அவன் அவள் பெயரிட்டழைத்தனன். அப்பொழுது அவளுக்குண்டான ஆனந்தத்தை எம்மாலெடுத்துரைக்க இயலாது. மணமுடிந்த நாட்டொடங்கி இதுகாறும் ஒரு நாளேனும் பெயரிட்டழையாதவர் இன்று பிரியம்வைத்து அன்புநிறைந்த பார்வையில் வாய்நிறையத் தன் பெயரிட்டழைத்ததைக்கேட்க, அவளுள்ளம் களிப்பின் மிகுதியால் அன்றேதான் பிறவிப்பயன்பெற்று விட்டதாகக் கருதிக்கொண்டு தன் இனிய குரலால் அடியாளுக் கிடும்

பணி யென்னவென்றனள்? தாராநாதன் மறுமொழியொன்றும் கூறுஞகி மௌனமேற்கொண்டான். ரோகிணி கணவன் ஏதுங்கூறுது மௌனமுற்றதற்கு உடம்பின் ஜாட்டியத்தால் பேசுவதற்குச் சிரமமாயிருப்பது போலுமென்றெண்ணிக்கொண்டு உடம்பைத் தடவிப் பார்த்தனள். தேகக்கூறு வேறுபாடற்றிருப்பினும் நெஞ்சிற் படபடப்பும், மூளையின் துடிதுடிப்பும் மிகுந்திருந்தன. காரணமறியாது அஞ்சினவளாய் விரைவாக நெருப்புமூட்டி வெந்நீர் காய்ச்சி வடிகட்டி யெடுத்துக்கொண்டு 'அமிர்தாஞ்சன டப்பி' யுடனருகணைந்து வெந்நீருட்கொண்டு இத்தைலத்தை யுபயோகியுங்கள், உடம்பு குணப்படுமென்று வேண்டினள்.

தாராநாதனுக்கு ஏற்பட்டிருக்கும் விஷயத்திற்கும் அமிர்தாஞ்சனத்துக்கும் என்ன சம்மந்தம்? தலைநோவுக்குத் தலையணை வைத்தால் தீருமா? இவைகளொன்றும் எனக்கு வேண்டாமென்றனன். ரோகிணி பின்னைவேண்டுவதென்ன? வென்றனள்.

தாராநாதன்:—அவள்மனஞ்சோதிக்க நினைந்து பெண்ணே! எனக்குற்ற மனோவேதனைக்கேற்ற பரிகாரம் உன் காதிலணைந்த வைரக்கம்மலே. அதனை விருப்புடன் நீ அளிப்பையேல் என்விசாரம் முற்றிலும் நீங்குமெனப்பகர்ந்தனன். அதுகேட்ட ரோகிணி இது ஒரு பிரமாதமா? இதன் பொருட்டா தாங்கள் இவ்வாறு மனக்கவலைப் படவேண்டும்? வைரத்தோடொன்று மட்டுமா? எனதின்னுயிரைக் கேட்பினும் இப்பொழுதே கொடுக்கத்தயார்என்று சொல்லி அவள் அணிந்திருந்த திருமாங்கல்யம் தவிர சர்வாபரணங்களையும் மனங்கோணுது கழற்றிக் கணவனெதிரில் வைத்து மிகவிநயமும் பணிதலோடும் எதிர்நின்றனள். தாராநாதன்

உனது அன்பிற்குகந்தேன். ஆனால், இப்பணிகள் உனக்குத் திரும்பவும் வேண்டாமோ என்றனன்.

ரோகிணி:—எனக்கு வேண்டுவது தாங்கள் ஒருவரே. தங்களுடைய தயவின்றி இவ்வாபரணங்கள் என் உடம்பிற்குப் பாரமாய்ச் சுமப்பதில் யாதுபயன்? இதுவரையும் அவைகளை நான் அணிந்து பெற்றபயனெதுவுங் காணேன்? என்று தளர்ந்தமொழிகளில் கூறித் தன் நீலவிழிகளினின்றும் கண்ணீரைத் தாரை தாரையாகப் பெருக்கினள்.

தாராநாதன் தாளாதவனாய் உள்ளங்கரைந்து தன்னாசனத்தினின் றெழுந்து அவளை அன்பளாவத்தாவி அழாதேயென்று அவள்கண்ணீரைத் தன் இளங்கைகளால் துடைத்துச் சமாதானஞ்செய்து, 'உனது அன்பையும், அழகையும், அருங்குணத்தையும் உணராது வீணே அவலமாயினேன். எனது அறியாமையினாலும், மனம்போல் நடந்த குற்றத்தினாலும் அடைந்த தீங்குபோதுமானது. அதற்கு நான் வெகுவாக வருந்துகின்றேன்.' என்று கூறி, உண்டு முடித்து அவளோடு உறவுகொண்டனன்.

அதுமுதல் ரோகிணி சிறிதும் மனம் வருந்தப் பொறானாகி அன்பு பெருக்கி வந்தனன், அதுகண்ட அவன் அன்னையும் அகமிகமகிழ்ந்துமகன் அறிவுதெளிந்துத்திருந்தியதற்கு தங்கள் குலதெய்வத்திற்குச்சிறப்பாக அபிஷேகங்களியற்றியும்பூசைபோட்டும்திருவிழாக்கொண்டாடினள். தனக்குற்ற தாரா அன்பின் விருத்தியால் மகனுக்குப்பல ஆசிகள்வழங்கினள். நாதன் தன்மனைவி, ஒப்பற்ற அழகுடையாளென்றறிந்ததிலிருந்து அவளைக்கல்வியில் உயரச்செய்யவேண்டுமென்றவிருப்பந் தோன்றியது. கல்வியின் இன்பமே பெரிதெனக் கருதும் சுபாவத்தானனதினால் அக்கொள்கையை மறந்தா

னில்லை. அதுமுதல் அவளைப்படிக்கும்படி அதிகமாகத் தூண்டி இரண்டொருவருடங்களுக்குள் அவளை வித்தியா வதியாக்கிவிட்டனன். அவளும் முன்னே கல்வி யின்பத் தின் பெருமையை யுணராது வீணேநாள் கழித்ததற்கு வருந்திச் சதா அதே வேலையாயிருந்து முயற்சி குன்ருது கசடறக்கற்று பெயர் சிறந்தாள். காதலிருவர் கருத் தொக்க ஆதரவு பட்டதே இன்பமாதலால் இத்தம்பதிகள் வேற்றுமையின்றி நன்ருகவே இல்லறதர்மத்தை நடாத் தினர். இதனிடையில், நிகழ்ந்த முக்கிய சம்பவமொன்றைக் கூறி இக்கதையை முடிக்கின்ரும்.

# ஏழாம் அத்தியாயம்

---

"தன்வினை தன்னைச்சுடும்"
"ஓட்டப்பம் வீட்டைச்சுடும்"

"எனைப்பகை யுற்றாரு முய்வர் வினைப்பகை
வீயாது பின்சென் றடும்" (திருக்குறள்)

நமது இந்திய நாட்டில் பூர்வகாலந்தொடங்கிச் சிலர் ஆங்கிலப்படிப்பு அனுசாரத்திற்கும், அக்கிரமச் செயலுக்கும் ஏதுவாக விருக்கின்றதென்று கருதித் தம்மக்களைக் கலாசாலைக் கனுப்பாமல் தங்கள் வீட்டிலேயே நிறுத்திக் கூட்டிலடைப்பட்ட கிளியைப் போலிருக்கும்படி செய்து வந்தனர். இதனால் அவர்கள் படிக்காமலே கெட்டு வீணாயினர். சிலர் நன்றாகப்படித்துப் பாஸ்செய்தும் வேலையகப்படாமல் தவிக்கின்றனர்; வேறு சிலர் நூல் நூற்றும், நெசவு செய்தும், வியாபாரம் நடாத்தியும் பணஞ் சம்பாதிப்பதைவிட்டுப் பாழும் ஆங்கிலப் படிப்பிலேன் வீண்பணச் செலவு என்று படிப்பை நிந்திக்கிறனர்.

இங்ஙனம் பலதிறப்பட்ட கொள்கையுடையார் கூட்டத்தில் இந்திரநாதன் தந்தையும் ஒருவன். இவன் தன் குமாரனைப் பள்ளிக்கனுப்பாமலே நாள் பல கடத்தி வீணாக்கினன்; அவனும், வேலையின்மையால், வீணரோடும்,

வெறியரோடுஞ் சேர்ந்து இஷ்டப்படி அங்குமிங்கும் அலைந்து காலம் போக்கினன். சிலசமயங்களில் தன் தகப்பனுடன் சேர்ந்து வியாபாரத்திற்குத் துணைப்போவன்; அவன் தந்தை வியாபாரஞ்செய்து பொருள்சம்பாதிப்பதில் மிகுந்த ஊக்கமுடையவன்; அரிசிபிடித்து அயல் நாடுகளுக்கனுப்பிப்பெரும் லாபமடைந்து ஆயிரக்கணக்கான பொருளைச் சேர்த்துவிட்டனன்; தாய்தந்தையர்களுக்கு இந்திரநாதன் ஒருவனே செல்வக்குமாரன்; இவன் தவறு செய்த சமயத்தில் தந்தைகண்டிக்க வந்தால் தாய் முன்வந்து வேண்டாமென்பதும், தாய்வைதுபுத்திகூறும்போது தந்தை தோன்றித்தடுப்பதுமான செயல்களால் இந்திரநாதன் எதேச்சாதிகாரமடைந்து அடக்குவாரற்றகாளைபோலாகி முன்னையினும் மூர்க்கர்பலரோடு கூடிப் பல துர்ச்செயல்களுக் குட்பட்டுத் தேறினன். அதனுடன் வயதும் முதிர்ந்தது; பல மாதர் மேல் இச்சைவைப்பதும், நாடகம், தெருக்கூத்து, சினிமா, சங்கீதக் கச்சேரி, தாசிகள் நடனம் ஆகியவற்றிற்குச் செல்வதுமாய்ப் பணத்தைப் பாழாக்கிவந்தனன். இங்ஙனம் சில நாள் கழியவே, எதிர் வீட்டு மோகனாவின் இச்சைவலையிகப்பட்டுத் தாய் தந்தையரைப் புறக்கணிக்கலானான். முடிவாக வீட்டுக்குத் தெரியாமல் பெரும்பணத்தைக் களவு செய்து மோகனாவுடன் வேற்றூருக்குப் பிரயாணங்கொண்டனன், அடித்து வளர்த்தாத ஆண்பிள்ளையும், முறுக்கி வளர்த்தாத மீசையும் துன்பத்திற்கே எதுவாமென்பதைப் பெற்றோர்கள் கவனிப்பாராக.

மோகனாவுடன் மெயில்வண்டியில் பம்பாய்க்குச் சென்ற இந்திரநாதன், முழு மூடனென்பதை வாசகர்களுக்கு

எடுத்துரைக்கவேண்டாம். மெயில் ஹெளரா ஸ்டேஷனில் புறப்படும்பொழுது காலேமணிபதினென்று. பம்பாய் சேரும்போது மறுநாள் மாலேமணி நான்கு. இருவரும் இந்துஸ்தான்பேச அறியாதவர். ஓரிரவும், பகலும், நெடுந்தொலேவு பிரயாணஞ் செய்ததினுலும், காலத்தில் சரியான உணவு கொள்ளாததினுலும் களேப்பு மேலிட்டு மிகமெலிந்தனர். மேலும் புதிய விடமும், பழக்க மற்றதினுலும், சாப்பாட்டு விடுதி முதலியன தெரிலதற்கின்றி "விக்டோரியா டெர்மினஸ்" (Victoriya Terminus) ஸ்டேஷனிலேயே தங்கி அங்குள்ள கடைகளில் பழம், ரொட்டி, மிட்டாய் வகைகளே வாங்கியுண்டு அன்றிரவை அவ்விடத்திலேயே கழித்தனர். மறுநாட் காலேயில் தமிழ் தெரிந்த தென்னுட்டார் ஒருவர் உறவுகொண்டு அவருதவியால் ரூபாய் ஐம்பதுக்குத் தனி வீடொன்று வாடகைக்குப்பேசி அதில் குடிப்புகுந்தனர். புதுமோகத்தாலும், பொருந்திய அன்பாலும் இரண்டொரு மாதம் கழிந்தன. "நின்று தின்ருல் குன்றுமாளும்" மேலும் நாகரிக மிகுந்த பெரும் பட்டணங்களில் சிறு பொருளுக்கும் செலவதிகம். அதிலும் ஆடம்பரப்பிரியர்கள் ஆனதால், வீட்டில் களவுசெய்து கொண்டுவந்த ரூபாய் 5000-மும் செலவழிந்தது. இனிச் செலவுக்குப் பணம் வேண்டும்; கொடுப்பவராார்? வேற்றூரில் இந்திரநாதன் கடன் பெற முடியுமா? அவன் கவலேயிலாழ்ந்தனன். இவன் கைவறண்டதெனத் தெரிந்ததும், மோகனு இவனே மெள்ள நீக்கிவிடவெண்ணினள்! வேசையர்க்குப் பணந்தானே பிரதானம். அன்பு, அருமை, பெருமை இவைகளேப்பற்றி ஆகவேண்டுவதென்ன? தாராநாதன் கைப்பொருளனேத்துங் கொள்ளே கொண்டு அவனேக் கைவிட்ட இவளுக்கு இந்திராநாதன்

எம்மாத்திரம்? பணக்கொழுப்புள்ள ஒருவனைக் கைப்பற்றிய பின்னரன்றோ இவனைக் கழித்துவிட வேண்டுமென்று கருதி அதற்குரிய காலத்தை யெதிர்பார்த்துக் கொண்டிருந்தனள். திருடிக்குப் தெய்வ சகாயமுண்டென்பதுபோல் இவள் எதிர்பார்த்திருந்தபடி மோகனு தன் குடியிருப்பு வீட்டின் தெரு வாயிலில், இந்திரநாதன் வெளியிற் சென்ற மாலை நேரத்தில் ஒருநாள் நின்று கொண்டிருக்கையில், மினுக்குந்தளுக்கும் துடுக்கும் வாய்ந்த "கோபால் தேவ்" என்ற மாராட்டிய வாலிபன் அவ்வழியாய்ச் சென்றனன். நின்றுக்கொண்டிருந்தமோகனுவின் ஒயிலையும், செயலையும் கண்டு உற்று நோக்கினன். இவளும் அவனைப் பார்த்தனள். அவ்வகையில் இருவரும் நெருங்கி ஒருவரையொருவர் பிறர் சகாய மின்றியே அறிமுகஞ் செய்து கொண்டனர். அது முதல் அவன், இந்திரநாதன் இல்லாத சமயப்பார்த்து அங்குவாலானுன். கோபால்தேவ், பம்பாயிலுள்ள "லாயர்ஸ் கம்பெனியை"ச்சேர்ந்தவன். ஒருநாள் கோபால்தேவும், மோகனுவும் அறைவீட்டில் சேர்ந்திருப்பதை இந்திரநாதன் கண்டு விட்டனன். அப்பொழுது அவனுக்குவந்தகோபத்திற்கோரளவேயில்லை. வேற்றூரில் செய்வதென்ன? ஒருவாறு கோபத்தை உள்ளடக்கிக் கொண்டு அவளை நோக்கி, அடிமோகனு! அன்று நீ செய்த சபதத்தின கருத்தென்ன? இன்று காட்டிய சதிச்செயலென்ன? நன்றிகொன்ற பாதகச் செயலன்றோ விது. உன் குலத்திற்குள்ள இயற்கைச் செயல்போலும். நானினிப்பேசியாவதென்ன? பரத்தையர் படுபாவிகளென்று படித்த சிலகவிகள் பாடிவைத்தது பொய்யும் புனைசுருட்டுமென்றிருந்தேன். அவர்கள் தங்கள் அனுபவத்தில் கண்டறிந்த உண்மையையே கூறினரென்பது இப்பொழுது

தானுணர்ந்தேன். இனி ஒரு நிமிஷமும் உன்னேடு சேர்ந்திருக்க நான் ஒருப்படேன். உன் முகத்தில் விழிப்பதும் பாவமானசெயல். ரூபாய் ஐயாயிரத்துடன் நான் தப்பித்துக் கொண்டது நல்லகாலமென நினைக்கிறேன். நீ எக்கேடோ கெட்டு ஒழி என்று கூறிவிட்டு அவளை திரும்பியுங்கூடப் பார்க்க மனமில்லாமல் வெளிவந்தனன். அச்சமயத்தில் தனக்கு அறிமுகமான தன்னூர் நண்பன் ஒருவன் வரக் கண்டு அவனுடன் சேர்ந்து அன்றே பம்பாயைவிட்டுத் தன்னூராகிய கல்கத்தாவந்து சேர்ந்தனன்.

இங்ஙனம், இந்திரநாதன் தன்னைத் தனியே விட்டுப் பிரிந்து போனதைப்பற்றியும், 'கோபால்தேவ்' எதிரில் தன்னை மானங்கெடப் பேசியதைப் பற்றியும், மோகனு கவலைப்பட்டாளில்லை. தான் அழகில் ஒப்பற்ற ஒரு தெய்வ ரதியென்பது அவள் மனோராஜ்ய மானதால், தான்வறுமை யால் கஷ்டப்பட நேராதென்பதில் உறுதிகொண்டாள். அதனுல், அவளுக்கு இந்திரநாதன் பிரிந்ததைப்பற்றி வருத்தப்படக் காரணமில்லை. இத்தகைய துராங்காரங் கொண்டவள் பிறரை மதிப்பளோ! தனது புதிய நண்பனுகிய லாயர்ஸ் கம்பெனியானுடன் அளவளாவி மனமகிழ்ச்சியுடன் கூடிவாழ்ந்தனள். "நெருப்பெடுக்கும் புதுப்பெண்ணுக்குப் பின்னுல்விழும் செருப்படி தெரியவருமோ" கோபால்தேவ் சூது, வாது, பொய், புரட்டு, நம்பிக்கைத் துரோகம், நயவஞ்சகங்களில் கைதேர்ந்த ஒரு பெயர்வழி. அதிலும் லாயர்ஸ் கம்பெனியில் பழகி அனுபவம் பெற்றவன். ஒருலாயர், ஒரு வேசியை எளிதில் வெல்லமாட்டாரா? இவ்விருவரில் எவர் சமர்த்தரென்பதை இனிமேல் தான் காணவேண்டும்?

லாயர் மோகனாவின்பால் மிக அன்புடையவன்போல் பாவனைகாட்டி, மோகனா வாய்திறந்து கேட்கும் பொருள்களை யாதொரு தாமதமின்றி அந்நிமிஷத்திலேயே வாங்கிக் கொடுத்துவந்தான். கல்நகைகளும்கண்மழுங்கும்பட்டுப்புடவைகளும் அவள்விரும்பாமலே வலுவில் தாராளமாய்-உதவி வந்தனன். அத்துடன் உடம்புக் குறுதியுள்ள 'டானிக்' கென்று உயர்ந்த இங்கிலிஷ் சாராய வகைகளையும் 'திராட்சைரச' மென்று கஞ்சா, அபின்கலந்த சோமபானங்களையும் அவளுக்குக் கொடுத்துப் பழக்க மறந்தானில்லை. குள்ளன் செயலைக் கள்ளனறியக்கூடுமா? இவ்வளவும், தன் பேரன்பைப் பெறும் பொருட்டுச் செய்யும் காதலின்வெகுமானமென்று கருதிக்கொண்டு மோகனா லாயர்பால் அன்பு பெருக்கி வந்தனள். லாயர், தன்பால் மோகனா அன்பும், நம்பிக்கையுங் கொண்டாளென் றறிந்தும், அச்சமயத்தைத் தவறவிடாமல், அன்றே அவளிடத்துள்ள பெருமதிப்புடைய் வைரநகைகளையும், பொருட் குவியலையும் கொள்ளை கொள்ள விரும்பி அதற்கேற்ற சூழ்ச்சிகளை ஆலோசித்துக் கொண்டிருந்தனன். முடிவில் அவளைக் குடிவெறி யதிகத்தால் பிரக்ஞையறச்செய்து கொள்ளை கொண்டு மறைந்து விடுவதே சரியெனத் தீர்மானித்து, சற்றுந்தாமதியாமல் அன்றிரவே, அபரிமிதமான சாராயவகைகளையும், சோமபானத்தையும் வாங்கிவந்து அவளுக்கு மிதமீறிக்கொடுக்க, அவள் மிகமகிழ்ந்தேற்றுக் குடித்து அறிவு தவறிப்பிணம் போலானாள். இதற்கு:—

"துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண்பவர்"

என்பது உதாரணமாகும். இவ்வாறு அவள் வெறிகொண் டயர்ந்ததும் அவள் தேகத்திலணிந்திருந்ததும், பெட்டியில் வைத்திருந்ததுமாகிய சர்வாபரணங்களையும், ரொக்கப் பொருள்களையும் ஒரு சேரத்திரட்டி ஒரு பெருமுடிப்பாகக் கட்டியெடுத்துக்கொண்டு பொன்னும் பொருளும் வைத் திருந்த அவள் நகைப்பெட்டியை அடுத்தவீட்டுக் கொல்லை யில் எறிந்துவிட்டு அவள்குடியிருப்பு வீட்டின்தெருக்கதவை இழுத்துச் சாத்திக்கொண்டு பிறரறியாமல் அன்றிரவே அவ் வூரைவிட்டு வேற்றூருக்குச் சென்றுவிட்டனன்.

மறுநாள் பொழுது புலர்ந்து மணி எட்டடித்துப் பல நிமிஷங்களாகியும், காலைச் சூரியன் தனது உஷ்ணகிரணங் களை எரி நெருப்புப்போல் வீசியும் மோகனு குடிவெறி தெளியாததினுல் எழுந்திருந்தாளில்லை. வீட்டு வேலைக்காரி வெடி குரல் காட்டி அதட்டி யெழுப்பியதால் திடுக்கிட்டெ ழுந்து ஏனென்று கேட்குமுன், அவள் தன் வேலைமேல் கொல்லைப்புறஞ்சென்றனள். கண் விழித்தமேல் நாழிகை யதிகப்பட்டதை யுணராது படுக்கையை விட்டிறங்குமுன் எதிரிலுள்ள தனது நகைப்பெட்டியை நோக்கினள். அது இருந்தவிடத்தில் காணப்பட வில்லை. திடுக்கிட்டவளாய்த் தன் கழுத்தையும், மார்பையும் தடவினுள். அவ்விடங்களி லிருந்த வைர அட்டிகையும், கடியாரச் சங்கிலியும், கல்லி ழைத்த மாங்கா மாலையும் தென்படவில்லை. காதைக் கவனித் தனள் பெருவிலை மதிப்புள்ள ரவைத்தோடையும் காணேம். ஐயோ! அப்பா! குய்யோ! கொள்ளையென்று கூக்குர லிட்டாள். வாய்விட்டுக் கதறினுள். மார்பில் அறைந்து கொண்டாள். கொல்லையிலிருந்த வேலைக்காரியும், அக்கம்

பக்கத்தாரும் தெருவில் செல்வோரும் கூச்சல்கேட்டு விவரம்காணக் கும்புகூடினர். மோகனு லாயர் என்றாள். எங் கேயென்றாள்? அருகிருந்தார். எந்த லாயர்; பெயரென்ன? என்றனர். இவளுக்குத் தெரிந்திருந்தாலல்லவோ! இன் ஞர். இன்ன தெருவிலுடையவர் என்று விவரம் கூறுவள். இவள் ஒன்றுமே அவனிடம் கேட்டுவைத்தாளில்லை. இதற் குள் போலீசுக்குத் தகவல் எட்டி விசாரணையும் நடந்தது. கொள்ளைசெய்த ஆசாமி இன்னாரென்று புலம் தெரியவில்லை. அடுத்தவீட்டுக் கொல்லையில் நகைப்பெட்டி கிடப்பதைக் கொண்டு மோகனு பக்கத்து வீட்டார்மீது பழி சுமத்தி னள். அவர்கள் பொருளாகி இவளையே திருப்பிப் பலகேள்வி கள் கேட்டதில் வாய்க்கொழுப்புச் சீலையில் வடிந்த கதை யாகத் தன் ஜாதியும் தன் செய்கையும் தன் தொழிலும் தெரியவந்ததன்றி அவர்கள்மீது குற்றஞ் சுமத்தக் கூடிய குறிகளொன்றும் காணப்படவில்லை; வந்தவர்கள் இவள் விபசரிக்கும் வேசி இவளுக்கு யார் வீடு வாடகைக் குக் கொடுத்தது? உடனே இத்தெருவைவிட்டு விலகும் படி செய்யுங்கள் என்று கூறிக் கண்டிப்பான உத்திரவிட்டுச் சென்றனர். இதற்கு அவள் இன்னது செய்வதெனத் தோன்றாது நிர்க்கதியற்று காலணாவுக்கும் வகையின்றி நடுத்தெருவில் சந்திசிரிக்க நின்றனள்.

கள்ளங்கபடற்று வஞ்சனையென்பதை அறியாத தாரா நாதன், மோகனுவிடத்துள்ள ஆங்கிலக் கல்விக்கும், மேனு ட்டு நாகரிகத்திற்கும், ஆசைப்பட்டு அவள்பால் நேச கொண்டிருந்ததற்கு அதனைப் பாராட்டாது, உபகாரம் ந்து நன்றிகொன்ற பாதகியாய் அவனிடத்துள்ள பெ

பொருள்களையும், பெருஞ் செலவுசெய்து கட்டிக்கொடுத்த பங்களாவையும், அதிலுள்ள அரிய சாமான்களையும் ஒன்றுக்குப் பாதியாய் விற்பனைசெய்து அவனிடத்துப் பொய்யுரை கூறி ஏமாற்றிவிட்டு, இந்திர நாதனை வீட்டில் களவு செய்து ரூபாய் ஐயாயிரம் யெடுத்துவர ஏற்பாடு செய்து அங்ஙனம் கொண்டுவந்த தொகையுடன் இருவரும் வேற்றூரேகி, அங்குத் தங்கி அப்பொருள்கள் செலவழிய, அது தெரிந்து அவளை நிர்க்கதியாய்க்கைவிட்ட அரும்பாவி மோகனுவுக்கு இப்பொழுது நேர்ந்த அவமானமும், பெருந்துக்கமும் கடவுளால் விதிக்கப்பட்ட தண்டனையேயாகும். "அரசன் அன்று கோல்வான்; தெய்வம் நின்று கோல்லும்" என்ற பொய்யாவாசகம் என்றும் மெய்வாசகமேயாம்.

இதனுல், "தன்வினை தன்னைச்சுடும்" என்பதும், "தீயவை செய்தார் கெடுதனிழறன்னை—வீயா தடியுறைந் தற்று" என்ற திருக்குறள் கருத்தும் நன்குவிளங்கும். மோகனு பல சூழ்ச்சிகள் செய்து தாராநாதனுக்கும் இந்திரநாதனுக்கும் பெருந்தீங்கிழைத்து வஞ்சித்ததினுலன்றோ! அவள் இங்ஙனம் கெட்டலைந்து தங்கவிடமின்றி நிற்க வேண்டியவளானுள். இவ்வாறு அவளைத் துர்க்கிருத்தியச் செயலுக்குத்தூண்டியது பணத்தின் மீது வைத்த பற்றன்றோ! அப்பற்ருகிய பணவாசையை இயன்றமட்டும் மட்டுப்படுத்த மாந்தர் முயலுகின்ருர்களில்லை. வஞ்சனையும் தீங்கும் தன்னை அறைந்து கொல்லும் பேய்களென்றுணராது அவைகளிடத்து ஆசையுடன் நேசங்கொள்ளுகின்றனர். அந்தோ! அவர்கள் அறியாமைக்கு நாம் மிகவருந்துவோம்.

இனியேனும், நமது சகோதரிகள் மோகனாவைப்போல் நயவஞ்சகஞ் செய்து துன்புற்று அலையாமலிருக்கும்படியும், தாராநாதன், இந்திர நாதர்களைப்போல் பிறர் மாதர் பால் காதல்வைத்து மோசம் போகாதிருக்கும் பொருட்டுமே நாம் சகோதரர்களுக்கு எச்சரிக்கை கூறுகின்றோம். சுபம்.

முற்றிற்று.

PRINTED AT THE B. N. PRESS, MOUNT ROAD, MADRAS.

# விளம்பரம்

விரைவில் வெளிவரக்கூடிய அரிய இனிய தமிழ் நாவல்கள்.

## BY THE SAME AUTHOR

1. "மதனகாந்தம்" அல்லது பால்ய விவாகத்தின் பரிதாபம்.
2. "காந்தாமணி" அல்லது கள்வர் கவர்ந்த கன்னிகை.
3. "பொன்னம்மாள்" அல்லது புக்ககத்துப் புனிதவதி.
4. "கங்காரத்தினம்" அல்லது கானகச் சிறுமி.
5. "ஆனந்தவல்லி" அல்லது அறிவிழந்த அரச கன்னிகை.

கதாசாகரம் பிரதர்ஸ்,

வியாபாரிகள், கோயமுத்தூர்.

# விளம்பரம்

## இரட்டைப் புலவர்

அல்லது

## இளஞ்சூரியர் முதுசூரியர் சரிதம்.

விலை அணு ஆறு. தபாற்செலவு பிரத்யேகம்.

'நவசக்தி' பத்திராசிரியர் ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் எழுதுவதாவது :—

ஆங்கிலத்தில் வெளிவந்துள்ள "மென் அவ் லெட்டர்ஸ்" என்ற முறையில் தமிழ்வாணர்களின் சரித்திரங்கள் சிறந்த ஆராய்ச்சி முறையில் வெளிவர வேண்டுமென்கிற விருப்பம் எமக்கு நெடுநாளாக உண்டு. அவ்விருப்பத்தை ஒருவாறு பூர்த்திசெய்து வரும் ஸ்ரீமான். சி. கு. நாராயணசாமி முதலியார் அவர்களுக்குத் தமிழுலகம் கடமைப்பட்டிருக்கிறது. இப்பொழுது நமது பார்வைக்குக் கிடைத்துள்ள நூலில் இரட்டைப் புலவர்களின் சரித்திரம் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. இதே முறையில் தமிழ் மொழிக்கு அணிகலன்களாயிருந்த பிற தமிழ்ப் புலவர்களுடைய சரித்திரம் வெளிவருமென்று அறிந்து மகிழ்ச்சியடைகிறோம். தமிழர் இத்தகைய நூல்களைப் போற்றுதல் அவசியம்.

## பொய்யாமொழிப் புலவர் சரிதம்.

விலை அணு 6. தபாற்செலவு பிரத்யேகம்.

தமிழ்வாணர் வரிசை 2.

'நவசக்தி' பத்திராசிரியர் ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் கூறுவதாவது :—

பொய்யாமொழிப் புலவர் என்ற பெருந் தமிழ்வாணரின் சரிதத்தை ஆராய்ச்சி முறையில் எழுதப்பட்ட இந்த நூலை நாம் போற்றுகிறோம். பலவித ஆதாரங்களைக் கொண்டு இந்நூல் எழுதப்பட்டிருக்கிறது. பொய்யாமொழிப் புலவருடைய சில செய்யுட்கள் உள்ளத்தை விகசிக்கச் செய்கின்றன. தமிழ் மணம் இப்பாக்களில் கமழ்கிறது என்று கூறுதல் பொருந்தும். இத்தகைய நூல்கள் பல விரைவில் வெளிவர வேண்டுமென்று விரும்புகிறோம்.

---

புத்தகம் வேண்டுவோர் அடியிற்காணும் விலாசத்துக்கு எழுதவும்.

சி. கு. நாராயணசாமி முதலியார்,

சாரதாவிலாஸ புத்தகசாலை, 126, தாமஸ் வீதி, கோயமுத்தூர்

# ஒரு முக்கிய விளம்பரம்

இம்முறையில் இதுவரையில் வெளிவராத
சிறந்த தமிழ்ப் புத்தகம்.

விலை ரூபாய் **2—0—0** தபாற் செலவு வேறு.

தொண்டை நாட்டுத் தொண்டைமண்டல வேளாள முதலிமார்களின் சிறந்த பெருமையைக் கூறுவது.

அச்சமூகத்தாருக்கும், அப்பரம்பரையாருக்குமே இந்நூல் சிறப்பு வகையில் உரியது.

அத்திருவாளர்கள் இதனைக் காதலுடன் ஏற்று ஓதி மகிழும் தன்மை வாய்ந்தது.

சொற்பப் பிரதிகளே கைவசம் உள்ளன. வேண்டுவோர் விரைவில் எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

தொண்டைமண்டல சதகம்
பொழிப்புரையும் சரிதவிளக்கமும்.

*இது—தொண்டை மண்டலத்தில் உள்ள மூர்த்தி, தலம், தீர்த்தம் முதலிய சிறப்புக்களும், அந்நாட்டில் சீர்சிறந்தது புகழ் மலிந்துவிளங்கிய அரசர், பிரபுக்கள், வள்ளல்கள், வித்துவான்கள், அடியார்கள் முதலியோர்கள் வரலாறுகளும், இயற்றிய நூல்களும், அரங்கேற்றிய செய்திகளும், விவரித்துக்கூறும் அரியதொரு வரலாற்று நூல்; இதற்குப் புதியதொரு பொழிப்புரையும், இலக்கணக் குறிப்பும், சரிதவிளக்கமும் தக்கபடி ஆராய்ந்து சேர்க்கப் பெற்றிருக்கிறது. சரித்திர ஆராய்ச்சி செய்வோருக்கும், பழைமையோர் வரலாற்றின் உண்மைச் செய்திகளை உணர்ந்து மகிழ்வோருக்கும் சிறந்த நல்விருந்தாகும். சிறப்பு வகையில் தொண்டை மண்டலத்து வேளாள முதலிமார்களின் ஏற்றமே கூறப்படுவதால், அம்மரபின்வழி வந்தார்க்கு இஃதொரு குலதனமாம். இத்தகைய புத்தகம் நானூறு பக்கம்கொண்டு கனத்த வெண்மை நிறக் கடிதத்தில் முத்துப்போன்ற எழுத்தில் அச்சிடப்பெற்று அழகான பைண்டுடன் விளக்குகிறது. வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெறுவாராக.*

விலாஸம் :—சி. கு. நாராயணசாமி முதலியார்.
126, தாமஸ் வீதி, கோயமுத்தூர்.

அல்லது

கதாசாகரம் பிரதர்ஸ், வியாபாரிகள், கோயமுத்தூர்.